பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

**PASCAL**
217/A ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவைக்கு அருகாமையில்)
கணிதம்
G. C. E (O/L), ஆண்டு11
இற் கான புதிய பிரிவு
ஆரம்பம்: 27.8.88.
By:
Mr. செல்வகுமார் (யூட்)
(Popular Maths Teacher of St. John's College)

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ 2/.

**PASCAL**
217/A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவைக்கு அருகாமையில்)
CHEMISTRY
A/L 90
ஆரம்பம்: 26.8.88 7 a.m.
A/L 89 வெப்பஇரசாயனம்
ஆரம்பம்: 26.8.88 8a.m.
By:
Mr. மணியம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஆவணி ௴ 09 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 11 ( 25 - 08 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 166

# வவுனியாக் காடுகளில் கடும் மோதல் மூண்டது

## ஹெலி மீதும் தாக்குதல்

வவுனியா, ஆக. 25

வவுனியாக் காடுகளில், இந்திய அமைதிப்படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் மூண்டுள்ளதாக இங்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போராளிகள் றொக்கட் லோஞ்சர்கள் ஏவுகணைகள் மூலம் தீவிரமான தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

அவர்கள் நடத்திய தாக்குதலில் அமைதிப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று சேதம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

வவுனியா மோதலில் மூன்று தமிழீழ விடுதலைப் புலிகள் கொலையுண்டனர் என்றும் 5பேர் காயமடைந்தனர் என்றும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அமைதிப் படைத் தரப்பில் ஏற்பட்ட உயிர்ச் சேதம் பற்றிய விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

காட்டுப் பகுதிகளில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களை அமைதிப் படையினர் கைப்பற்றியதாகவும் அறிவிக்கப்பட்டது. (அ)

## 20 ஆயிரம் பேருக்கு உடனடி வேலைவாய்ப்பு

### அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஆக. 25

20 ஆயிரம் பேருக்கு உடனடி வேலைவாய்ப்பு வழங்கும்திட்டம்ஒன்றை நேற்று அமைச்சரவை அங்கீகரித்தது.

பிரதமர் பிரேமதாஸ இத்திட்டத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

இத்திட்டத்தின் கீழ் உணவு முத்திரை பெற்று வரும் 20 ஆயிரம் இளைஞர்களுக்குவேலைவாய்ப்பு வழங்கப்படும்.

முதல் மூன்று மாதங்களுக்கு மாதம் 600 ரூபா வீதமும், நான்காம் ஐந்தாம் மாதங்களுக்கு மாதம் 700 ரூபாவும்

ஏழாவது மாதத்தில் இருந்து மாதம் ஆயிரம் ரூபாவும் இவர்களுக்குச் சம்பளமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## யாழ். ரயில் சேவை மீண்டும் நாளை முதல்

### சனிக்கிழமை முற்பகல் இங்கு வரும்

யாழ்ப்பாணம் ஆக, 25

கொழும்பு - யாழ்ப்பாணம் ரயில்சேவை நாளை மீண்டும் ஆரம்பமாகிறது. போக்குவரத்து அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரூபவாஹினி இதனைத் தெரிவித்தது.

நாளைவெள்ளிக்கிழமை கொழும்பில் இருந்து புறப்படும் ரயில் 27ஆம் திகதி காலை 11-30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடையும்.

இதற்கான ஏற்பாடுகளை ரயில்வே திணைக்களம் செய்திருக்கிறது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி வாரத்தில் இரண்டு நாட்கள் – அதாவது சனி ஞாயிறு தினங்களில் ரயில் யாழ்ப்பாணம் வந்து திரும்பும்.

கொழும்பிலிருந்து இந்த ரயில் வெள்ளி சனிக்கிழமைகளில் புறப்படும்.

இதேவேளை வழமையான கொழும்பு — வவுனியா ரயில் சேவை தொடர்ந்து நடைபெறும். (ஒ)

## யாழ் நகரில் பலத்த காவல்

யாழ்ப்பாணம் ஆக 25

நேற்றுக் காலை யாழ் நகர வீதிகளில் அமைதிப் படையினர். பலத்த காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததைக்காணமுடிந்தது.

யாழ் ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி, மாட்டின் வீதி, ஆகியவற்றின் இருமருங்கிலும் உள்ள மதில்களின் பின்னல் படையினர் பதுங்கியிருந்து அவதானிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

ஆஸ்பத்திரி வீதி வழியாக பஸ் நிலையத்தை நோக்கிச் சென்ற பஸ்களும் ஏனைய வாகனங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தாலிக்கொடிக்கு மதிப்பளிக்கத் தெரிந்த 'பண்பான' கொள்ளையர்!

யாழ்ப்பாணம், ஆக. 25

கொள்ளையர்களுக்கும், தாலிக்கொடிக்கு மதிப்பளிக்கும் பண்பு சில வேளைகளில் இருக்கத்தான் செய்கிறது!

''தாலி தமிழ்ப் பெண்களுக்கு வேலி'' என்பதை உணர்ந்தோ என்னவோ நல்லூருக்கு வந்த கொள்ளையர்சிலர் தாம்கொள்ளையடித்த தாலிக்கொடியை மணமகளிடம் திரும்பக் கொடுத்துவிட்டுச் சென்ற இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நல்லூர் அரசவீதியில் உள்ள வீடு ஒன்றில் நடந்த கொள்ளைச் சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:-

திருமணம் முடிந்த மறுநாள் புதுமணத் தம்பதிகள் தங்கியிருந்த வீட்டினுள் இரவு நேரம் புகுந்த ஆயுதம் தாங்கியவர்கள் சிலர் அங்கிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா

(8-ஆம் பக்கம் பார்க்க)

## மரண நிவாரண கொடுப்பனவு: நாளை முதல் பெறலாம்

யாழ்ப்பாணம், ஆக 25

மரணச் செலவுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் நாளை 26 ஆம் திகதி முதல் யாழ் செயலகத்தில் வழங்கப்படவுள்ளன.

இறந்தவர் குறிப்பிட்ட குடும்பத்தின் உழைப்பாளியாகவும் அவரது உழைப்பில் குடும்பம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

6 அம்சக் கோரிக்கையை முன்வைத்து

## இன்று ஹர்த்தாலுக்கு ஏற்பாடு!

யாழ்ப்பாணம் ஆக 25

தமிழ் மக்களைப் பாதிக்கும் ஆறு முக்கிய விடயங்களைக் கோரிக்கைகளாக முன்வைத்து, வடக்கு கிழக்குப் பகுதி எங்கும் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு இந்தக் ஹர்த்தாலுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ். அன்னையர் முன்னணி உட்பட பல பொது ஸ்தாபனங்களும் இதற்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதோடு, ஆதரவு நல்குமாறு மக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளன.

பின்வரும் 6 கோரிக்கைகளை முன்வைத்தே இன்றைய ஹர்த்தால் நடத்தப்படுகிறது

★ தமிழ்மக்கள் கைது செய்யப்படுதல், தாக்கப்படுதல், தடுத்து வைக்கப்படுதல்–

★ தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளப்படுவதைத் தடுக்க இந்திய அரசு தவறியமை–

★ ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டு முடிந்தும் தடுப்புக்காவல் கைதிகள் விடுவிக்கப்படாமை–

★ வன்னிப் பகுதி தேடுதலினால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளமை.

★ கடல் வலயத் தடையினால் மீனவர் பாதிக்கப்பட்டுள்ளமை ஆகியவற்றை ஆட்சேபித்தும்–

★ யுத்த நிறுத்தத்தை அமுல் நடத்தக் கோரியுமே–

இன்றைய ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-க)

## ● கொழும்புக்கு மினி பஸ்கள் செல்லவில்லை

நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு எந்த மினிபஸ்ஸும் சேவையில் ஈடுபடவில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

அங்கீகாரம் பெற்ற நிலையங்களில்

## பெற்றோல்: லீற்றர் 18 ரூபாவுக்கு விற்பனை!

யாழ்ப்பாணம், ஆக 25

யாழ்ப்பாணத்தில் சில அங்கீகாரம் பெற்ற எரிபொருள் விற்பனை நிலையங்களில் நேற்று பெற்றோல் லீற்றர் 18 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாதிருக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்து வருகிறபோதிலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற எரிபொருள் நிலையங்களில் கூட, எரிபொருள் கட்டுப்பாட்டு விலையைவிட அதிகரித்து விற்கப்படுவது குறித்து வாடிக்கையாளர்கள் பலர் விச

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

25 – 08 – 88
ஆவணி — 09
வியாழக்கிழமை
சுபநேரம்:
07.35முதல் 09.05வரை
ராகுகாலம்:
01.35முதல் 03 05வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

கொழும்பில் இருந்து

## யாழ். வந்த பஸ் குடைசாய்ந்து பெண்பலி

### திங்கள் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக.25

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று குடைசாய்ந்ததனுல் பெண் ஒருவர் மரணமானுர். இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் 'உடப்பு' என்னும்இடத்திற்கும் 'ஆராட்சிக் கட்டுவ' என்னும் இடத்திற்கும் இடையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வெகுவேகமாக வந்து கொண்டிருந்த பஸ் 'பிறேக்' பிடிக்க முடியாமையினுல் அருகில் இருந்தமரங்களுடன் மோதிக் குடைசாய்ந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளை துர்க்காதேவி தேர் இன்று

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

இன்றைய திருவிழாவுக்கு குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் அம்பாளைத் தரிசிக்கப் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பக்தர்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும், வீதி ஒழுங்குகளைக் கவனிப்பதற்காகவும் தொண்டர் ஸ்தாபனங்கள் சேவையில் ஈடுபடுகின்றன.

நாளை வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் மறுநாள் பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறும். (ஒ-க)

## சிறப்பிதழ்

4-ஆம் 5-ஆம் பக்கங்களில்

## முச்சந்தி முரளி



திருடுறதிலை பண்பு காட்டிச்சினமோ அல்லது சுருட்டினது போதும் போதும் எண்டதாலை விட்டினமோ எண்டது அவைக்குத்தான் தெரியும். எப்படியாய் இருந்தாலும் தாலிக்கு மதிப்புக் குடுக்கிற அளவுக்கு இருந்தினமே எண்டது பெரிய விஷயம் தான்...!

வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில்

## நாளைய உண்ணாவிரதத்தில் சுழற்சி முறையில் 6 பேர்!

யாழ்ப்பாணம், ஆக 25

சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் திட்டமிட்டபடி நாளை காலை யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் ஆலய முன்றலில் ஆரம்பமாக உள்ளது. ஆறுபேர் முதல்நாளன்று உண்ணாவிரதம் அனுஷ்டிப்பர்.

★ பூஸா முகாமில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் நடத்திவரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாகவும்—

★ அவர்களின் கோரிக்கையை ஏற்று ஸ்ரீலங்கா அரசு அவர்களை விடுதலைசெய்ய வேண்டும் எனக் கோரியும் -

★ இந்தியப் படையினரால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் கைதுசெய்யப்பட்டு தொடர்ந்தும் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை விடுதலை செய்யக் கோரியுமே —

இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு – கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க யாழ் அன்னையர் முன்னணியினர், பல்கலைக்கழக மாணவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

## இரண்டு குழந்தைகள் வயிற்றோட்டத்திற்குப் பலி!

### யாழ். ஆஸ்பத்திரியில் சம்பவம்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகள் வயிற்றோட்டநோயினுல் நேற்றுமரணமானுர்கள். முல்லைத்தீவைச் சேர்ந்தஇராமச்சந்திரன் ஜெயகரன (வயது 3), இராமச்சந்திரன்ரஞ்ஜு (வயது 2) ஆகியோரே மரணமானவர்களாவர்.

முல்லைத்தீவில் வயிற்றோட்ட நோயினுல் பீடிக்கப்பட்ட இவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தனர்.

எனினும் கடந்தவெள்ளிக்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுவதற்காக கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பயன்அளிக்காமல் போகவே நேற்றுக் காலை ஒரு குழந்தையும் நண்பகல் மற்றக் குழந்தையும் மரணமாகின.

வயிற்றோட்ட நோயினுல் பாதிக்கப்பட்ட மேலும்சிலர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது. (ஒ-10)

## எமது உறுதியான போராட்டம் வெற்றிபெற மக்கள் ஆதரவு தேவை

### பூஸா உண்ணாவிரதிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக, 25

எமது உறுதியான போராட்டம் வெற்றிபெற, பொதுமக்களும் பரந்த அளவில் எமக்கு ஆதரவாக போராட்டங்களை நடத்த வேண்டும்.

பூஸா முகாமில் இரண்டாம் கட்ட உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்த தமிழ் இளைஞர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை உண்ணாவிரதிகளைப் பார்வையிடச் சென்ற அவர்களது உறவினர்களிடம் இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை உண்ணாவிரதிகள் தாம் எப்படியும் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்,

இவர்களுக்கு முகாமில் எந்த விதமான நெருக்கடிகளோ தொல்லைகளோ இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மலையகப் பகுதியில் உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக சுவரொட்டிப் போராட்டங்களும் நடத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கட்டம் கட்டமாக நடைபெறும் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தில் இப்போது இரண்டாவது குழுவினர் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகின்றனர். (ஒ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மச்சிங்ட் ஹுன்ஸ் போமர் இணைத்த உறுதியான 5 GY III; 5 GY; 10 GY;10GYA மொடல் சில்வர் ரோன் அன்ரனுகப், கிளிப், அன்ரனுவை - விற்பனையாளர், பாவனையாளர், தயாரிப்பாளர், திருத்தபவர்மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்: ''சில்வர் ரோன் எலெக்ரோனிக் 187, மின்சார நிலைய வீதி, (மேல்மாடி) யாழ்ப்பாணம், (5930)

London இல் இருந்து தருவிக்கப்பட்ட Wheel-Chair விற்பனைக்குண்டு. ஞாயிறு, புதன் தவிர்ந்த ஏனைய நாட்களில் எம்முடன் தொடர்புகொள்ளலாம். S. A Rejinold, Palai Valavu, A. V. Road, Ariyalai, Jaffna. (5972)

பாவித்த விட்டுத்தளபாடங்கள் ஸ்ரீல் அலுமாரி, தேக்கு அலுமாரி, கட்டில் மெத்தைகள், விருக்கை கதிரைகள், கண்ணுடி மேசைகள், Hall set, Oven, சாப்பாட்டு மேசைகள்,குத்து விளக்கு மற்றும் பலவித பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜா 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென் பற்றிக்ஸ் சந்தி அருகில்) (5843)

புதிய Honda Recon ditioned புதிய பழைய Model C 90, C 70, C50, MD90, MB5, மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. No 16, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (A G A. அலுவலகம் முன்பாக) (5965)

### வீடுவளவு விற்பனைக்கு

தாவடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் தெற்கு வீதி ஒழுங்கையில் 3 பரப்புக் காணியில் ஆறு (6) அறைகளும், 3 ஹோல்களும் சகல வசதிகளும் கொண்டவீடு,வளவுடன் நல்ல சுற்றுடலிலுள்ள காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. சுப்பிரமணியம், தாவடி. (5937)

### புறஜெக்டர் விற்பனை

விடியோ சினிமா புறஜெக்டர் (100'') ஒன்றும், இரத்தம் சோதிக்கும் குளுக்கோ மீற்றர் (Glucometer) ஒன்றும் விற்பனைக்குண்டு.தொடர்பு:- ''மினி ரேட் சென்ரர்'', J. M. C. சட்டடம், 3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (5932)

### முட்டை விற்பனை

முட்டை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 1) மொட்டி ப'ம், ஸ்ரேசன் ரோட், மயிலன்காடு, சுன்னு ம்; 2) மொட்டி, பான்ஸி கவுஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம். (5934)

### வான், மோட்டார் சைக்கிள் விற்பனை

ஒஸ்ரின். J4 மொடல் டிலிவரி வான், கொண்டா CB 90 மோட்டார் சையிக்கிள் விற்பனைக்கு உண்டு. நல்ல நிலையில் உள்ளவை. விலை நேரில் கதைத்துக் கொள்ளலாம். K. பரமநாதன், சுருவில். Bus Route No, 780 .(ஊர்காவற்றுறை) (5928)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards),திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விஷேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

### மைசூர் No. 1 அரிசி விற்பனை

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது No.1 அரிசி. சகலதேவைகளுக்கும் கல் இல்லாத சுத்தம், சுவை, தரம் நிறைந்த மைசூர் No. 1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய் (5807)

### வைன்டிங் அன்ட் T.V டெக் உதிரிப்பாகங்கள்

ஸ்பீக்கர் வைண்டிங் ரான்ஸ் போமர், வைன்டிங், பற்றறி சார்ஜர் புதிதாகச் செய்யவும், கசற் பிளேயர், றேடியோ -- திருத்தல் ஆகியவற்றுக்கும், T.V. டெக் உதிரிப்பாகங்களை மலிவாகப் பெற்றுக் கொள்ளவும், பதிவு செய்த புதிய, பழைய பாடல்களைப் பெற்றுக் கொள்ளவும் மினி ரேட் சென்ரர், 3 J. M. C பில்டிங், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். (5933)

## தேவை

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ் மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடியவீடு அல்லது பகுதி வீடு வாடகைக்குத் தேவை. யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி சுற்றுடலில் விரும்பத்தக்கது. இல. 341 C/o உதயன்,யாழ்ப்பாணம். (5936)

### சமையற்கார ஆள் தேவை

250 பிள்ளைகளுக்கு சைவ உணவு சமைக்கக் கூடிய ஆண் அல்லது பெண் சமையற்காரர் உடனடியாகத் தேவை. அனுபவச் சான்றிதழ்களுடன் ஞாயிறு 28 - 08 - 88 காலை 9 00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் தரவும். தொடர்பு: முத்துத்தம்பி அநாதை இல்லம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (5846)

## வகுப்புகள்

Radio, T. V, Air-condtioning, Refrigeratoin, Draftsmen வயறிங், வெல்டிங், வைண்டிங், பிளம்பிங், மோட்டார் மெக்கானிக் Typing, Spoken English மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த பொறியியல் நிபுணர்களால் கற்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa, Engineering Aid Hall, 328, நாவலர் வீதி, [ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (5918)

### SPOKEN ENGLISH with Grammar

வெள்ளி தவிர்ந்த ஏனைய ஆறு நாட்களும் நேரம்: காலை 7.30-8.30 ஆரம்பம் 27-08-88. தூர இடங்களில் இருந்து வருவோர்க்கு இரு மணித்தியால வகுப்பு திங்கள் புதன் நாட்களில் காலை 10.30 -12.30. ஆரம்பம்: 29-08-88. தொடர்பு: S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (5849)

### பயிற்சி வகுப்புகள்

கேக் செய்முறை — ஐசிங், ஜெனரல் குக்கரி வகுப்புகள் பயிற்றுவிக்கப்படும். பயிற்சிகள் 31-8-88 இல் ஆரம்பமாகின்றன. உடன் தொடர்புகொள்ளவும்: 11/2, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (5931)

### பிரெஞ்ச் மொழி

1988 ஆம் ஆண்டு .பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட ''பிரெஞ்ச் மொழி'' வகுப்புக்கள் சலுகைக் கட்டணத்தில் 1- 9. 88 இல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு:- ''Alliance Francaise De Jaffna'' (யாழ்/ பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம்) 130, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [5929]

### யாழ். சைனீஸ் றெஸ்ரோறென்ற்

எங்கள் ஸ்தாபனம் தினசரி பிற்பகல் 5. 30 வரை திறந்திருக்கும். தங்குமிட வசதியும் உண்டு. யாழ். சைனீஸ் றெஸ்ரோறென்ற் பிறைவேற் லிமிட்டெட் முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (5917)

### தவறிவிட்டது

நாகமணி மயில்வாகனம் 36/1, லோட்டஸ் வீதி, மானிப்பாய் ஆகிய எனது அடையாள அட்டை மானிப்பாயிலிருந்து நல்லூர்க் கோயிலுக்கு வரும் வழியில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்- (5975)


# M '3' TRAVELS
## பெருமையுடன் வழங்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா

| | வெற்றிடங்கள் |
|---|---|
| 1) புல்டோசர் ஒப்பறேற்றர் | 2 |
| 2) கிறேன் ஒப்பறேற்றர் | 2 |
| 3) எக்சிவேற்றர் ஒப்பறேற்றர் | 3 |
| 4) A/C மெக்கானிக் | |

மேற்கூறிய தொழில் வாய்ப்புகளுக்கு எம்மிடம் கடவுச் சீட்டுத் தந்தவர்கள் பிரயாணம் செய்து விட்டனர். மிகுதி வெற்றிடங்களுக்கு உடன் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

5) கேற்றறிங் கிளினேர்ஸ் (சாப்பாடு பரிமாறும் கிளினேர்ஸ்)
6) கனரக வாகன சாரதிகள், 6 வருட கனரக வாகன அத்தாட்சிப் பத்திரத்துடன்

### குவைத்

1) கிளினேர்ஸ்

குறிப்பு:

1. சவூதிஅரேபியாவிற்கு பிரயாணம் செய்வதற்குக்கடவுச்சீட்டுதந்தவர்களில் அநேகரின் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் எமது முகவர் இங்கு நிற்பதனுல் கடவுச்சீட்டுத்தந்தவர்கள் முகவரை எமது காங்கேசன்துறைக் காரியாலயத்தில் சந்திக்கவும்.
2. தங்கள் வசதி கருதி எதிர்வரும் 26ஆம் திகதி முதல் இல 1, 2ஆம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். இம் முகவரியில் எமது கிளைக் காரியாலயம் ஒன்று திறக்கப்படவுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

வெளிநாட்டுப் பிரயாணம் என்றதும் உங்கள் மனதில் ஒலிக்க வேண்டிய பெயர்:

# M '3' Travel's

உங்கள் தேவை எங்கள் சேவை

**T. INDRANATHAN**

M '3' Travel's
College Road, Sothy Lane,
K. K. S.

(C6409)



## பிரயாண ஒழுங்கு

நம்பிக்கையாகக் கனடா செல்ல விரும்புவோருக்கு

ஓர் அரிய வாய்ப்பு

நேரடியாக கனடா செல்ல இருவருக்கு வாய்ப்பு உண்டு. ஆங்கில அறிவு இருத்தல் வேண்டும்.

''திருப்பரங்குன்றம்''
வேலணை மேற்கு.
(வயிரவர் கோவிலடி) (5976)



## கொம்பியூட்டர் பயிற்சி

Basic & Advanced Basic Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம்;

26-8-88 Weekend Batch / Weekday Batch

காலம்: 2 மாதம் ஆரம்ப கட்டணம்; Rs. 400/-

# IDP

342, K.K.S Road, (சிவன்கோவிலடி) யாழ்ப்பாணம். (12. 30 p.m)

K.K.S. Road, (துர்க்கையம்மன்கோவிலடி) தெல்லிப்பளை. (3. 30 p. m)

(C 6330)



UNITED NATIONS OFFICER IS LOOKING FOR A HOUSE (3 BEDROOMS/PREFERABLY FURNISHED) IN NALLUR.

**Please contact :**
**UNHCR Office**
223, Temple Road,
Nallur.
Tel. 373

(5973)



## எமது நேற்றைய புதிய வெளியீடு

கிருஷ்ணா — ஸ்ரீதேவி

# "கௌரி சங்கர்"

இவ்வார வெளியீடுகள்:-

மீண்டும் ஒறிஜினல் பிரதிகளில் (Original Copies)

1. காஞ்சித் தலைவன்
2. தங்கச் சுரங்கம்
3. கொடுத்து வைத்தவள்
4. புதிய பூமி
5. நான் ஏன் பிறந்தேன்
6. என் கடமை
7. அன்புக் கரங்கள்
8. குடியிருந்த கோயில்
9. பெரிய இடத்துப்பெண்
10. நல்ல நேரம்
11. CODE NAME BLACK FIRE } War Films
12. BLACK COBRA

துணம் விடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C-6335)


வர்த்தக பாட கல்வி ஆலோசகர்:

# நேர்முகப் பரீட்சைக்கு தெரிவானோர் விவரம்

பலாலி, ஆக. 25

வர்த்தக பாடத்திற்கான சேவைக்காலக் கல்வி ஆலோசகர்களைத் தெரிவதற்காக யாழ். கல்வி மாவட்டத்திற்கென யாழ். கல்வித் திணைக்களத்தினுல் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் நேர்முகப் பரீட்சைக்காக தெரியப்பட்டவர்களின் பெயர் விவரங்களை யாழ். கல்வித் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

பெயர் குறிப்பிடப்பட்டவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒன்றரை மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

திரு. வி. கே. பாலசுப்பிரமணியம் (யாழ். இந்துக்கல்லூரி). திரு. எஸ். புஸ்பலிங்கம் (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி பருத்தித்துறை), திரு. வீ. ஸ்ரீகாந்தன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), திரு. எஸ் ஏ. துரைராசா (வண்ணார்பண்ணை நாவலர் ம.வி.). திரு. என் தனபாலசிங்கம் (சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) செல்வி என். வேலுப்பிள்ளை (கொக்குவில் இந்துக்கல்லூரி), திரு. சி. தங்கவேல் (இடைக்காடு மகாவித்தியாலயம்). திரு. கே. பழனிவேற்பிள்ளை (யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்), திரு. கே. கதிரமலை (கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி), திரு. பி. நடராசா (நல்லூர் விக்னேஸ்வர வித்தியாலயம்), திரு. சி. ஏ. தவச்சந்திரன் (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி பருத்தித்துறை), திரு. எஸ். பி. ஞானப்பிரகாசம் (ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை) [ஓ-119]


## த ரஸ்ற் ஏஜென்சிஸ்

வழங்கும்

### வெளிநாட்டு வேலை வாய்ப்புகள்

### அபுதாபி

| | |
|---|---|
| 20 சாரதிகள் | -ரூ. 5200.00 |
| 20 சமையல்காரர்கள் | -ரூ. 4000.00 |
| 20 உடை தயாரிப்பாளர்கள் (பெண்கள்—ஆண்கள்) | -ரூ. 5200.00 |
| 100 முஸ்லிம் பணிப்பெண்கள் | -ரூ. 3600.00 |
| 100 பணிப்பெண்கள் - | ரூ. 3200.00 |

### சுல்தானேற் ஓமான்

| | |
|---|---|
| 50 பணிப்பெண்கள் - (26—38 வயது) | ரூ. 3200.00 |

பாஸ்போட், விசா, பொன்ட், ரிக்கற்றிங் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

இரண்டு வருட ஒப்பந்தம்— சாப்பாடு, இருப்பிட வசதி

THE TRUST AGENCIES
Station Road, Mallakam.
(Near Tyre Shop)
Labour Licence -608
Dept Approval No: 5
AL/608/ADVT/3/88
AL/608/ADVT4/88

(6010)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



**திருமதி தவராணி கதிரவேற்பிள்ளை (தில்லைநாதன்)**

(முன்னுள் இயந்திர இயக்குநர் யாழ் - ராணி சினிமா)

மண்ணுலகம்: 29 - 4 - 1948
விண்ணுலகம்: 26 - 7 - 1988

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்முடன் இருந்து எம்மைவிட்டுப் பிரிந்த அன்பின் தீபமே! நாட்கள் பலவானுலும், உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், தாய்,
சகோதரிகள். மருமக்கள், பேத்தி.
53, கடற்கரை வீதி.
யாழ்ப்பாணம். (6006)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு படகுச் சேவையை விரைவில் சீர்செய்யுமாறுகோரி மந்திரிக்கு மகஜர்

நெடுந்தீவு. ஆக. 25

நெடுந்தீவுப் படகுச் சேவையை விரைவில் சீர்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் பெருந்தெருக்கள் அமைச்சுக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்திருக்கிறது.

அந்த மகஜரில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னர் மூன்று திணைக்களங்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த நெடுந்தீவு படகுச் சேவைக்கு தனியான நிர்வாகப்பிரிவு தேவை யென கடந்த 15 வருடங்களுக்கு முன்பிருந்தே வற்புறுத்தி வந்தோம்.

அதையடுத்து இயந்திரப் பொறியியலாளர் திணைக்களத்தின் கீழ் மேற்படிசேவை கொண்டு வரப்பட்டதாயினும் தற்போது இச்சேவை திருப்திகரமானதாக இல்லை.

பழுதடைந்து விடும் படகுகளைத் திருத்தக் கூடிய சாத்தியங்கள் இருந்தும் அவை கவனிக்கப்படவில்லை. மேலும் தகுந்த கவனிப்பின்மையால் படகுகள் பழுதடைவதையும் அடிக்கடி சேவைகள் பாதிக்கப்படுவதையும் நாம் உணரமுடிகிறது.

இச்சேவைக்கென அரசு ஆறு படகுகளை வழங்கிய போதும் உரிய பராமரிப்பு இன்மையால் உத்தரவாதமளிக்கப்பட்ட காலத்துக்கு முன்னதாகவே அவை சேவைக்கு லாயக்கற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன.

தற்போது சேவையில் உள்ள ஒரேயொரு படகான குமுதினியும் அடிக்கடி பழுதடைவதால், தனியார் படகுகளில் நாம் மோசமான பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. சில சமயம் கால் நடைகள், பொதிகள் என்பவற்றுடன் சேர்ந்து பிரயாணம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆகவே பாதுகாப்பும் உறுதியும் நிறைந்தபுதிய படகுகளை விரைவில் சேவையில் ஈடுபடுத்துவதுடன் தனிநிர்வாகப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும் கோருகின்றோம்- எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-111)


## ஊறுகாய், மோர்மிளகாய் விற்பனை

ஆலய உற்சவ, தண்ணீர் பந்தல் தேவைகளுக்கு வேண்டிய தரமான ஊறுகாய், மோர்மிளகாய் ஆகியவற்றை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

✶ சுதேசிய ஊறுகாய்ப் போத்தல் ஒன்றின் அறிமுக விலை ரூபா 15/— மட்டுமே.


டி பொருட்களை கடைகளுக்கு கமிஷன் அடிப்படையில் விநியோகம் செய்ய விரும்பும் விநியோகஸ்தர்கள் எம்முடன் தொடர்பு கொள்க.

எமது சபைக்கு பத்திரிகை முகவர்களாக செயற்பட போதிய முன் அனுபவம் உள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சமூக அபிவிருத்திச் சபை
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[C/6307]



## புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 இரும்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.




ஈழத்தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்குமுறைகளைக் கண்டித்தும், தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் பாரிஸ் மாநகரில் நடைபெற்ற அமைதிப் பேரணியையே படத்தில் காண்கிறீர்கள்.

பிரான்ஸ் வாழ் ஈழத்தமிழர்கள் இப்பேரணியை ஒழுங்கு செய்திருந்தனர்.

இது சம்பந்தமான செய்தி உதயனில் ஏற்கனவே வெளியாகி இருந்தது தெரிந்ததே. (ஒ)

## கிளிநொச்சியில் அகதிகள் பராமரிப்பு

யாழ்ப்பாணம், ஆக 25

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அகதிகளாக இடம் பெயர்ந்த மக்கள் பலர் கிளிநொச்சியை அண்மித்த பகுதிகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களுக்கு கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் உணவு, உடை என்பனவற்றை வழங்கி, அவர்களைப் பராமரித்து வருகின்றது.

இந்தத் தகவலை கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வு கழக செயலாளர் திரு. எஸ். சிவராஜலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

விஸ்வமடு பகுதியைச் சேர்ந்த இருநூறு குடும்பங்கள் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்திலும்-

தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த 90 குடும்பங்கள் உதயநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும்-

வட்டக்கச்சி பகுதியைச் சேந்த 15 முஸ்லிம் குடும்பங்கள், 154 ஆம் கட்டையடியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றிலும் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என அவர் தெரிவித்தார். (உ-க-9)

## வங்கிக் கொள்ளை: பணம் நகைகள் மீட்பு

கொழும்பு, ஆக. 25

கடந்த திங்கட்கிழமை கண்டியில் மக்கள் வங்கிக் கிளை ஒன்றில் கொள்ளையடிக்கப் பட்ட 65 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் முதலியவற்றைப் பொலீசார் செவ்வாய் பிற்பகல் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்பட்டது.

இக்கொள்ளை தொடர்பாக தங்காலையைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் இன்னொருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

தீவிர விசாரணையின் போது, பல்கலைக் கழக மாணவன் தெரிவித்த தகவலைத் தொடர்ந்து பொலீஸார் வத்தேகம காட்டுப்பகுதிக்கு விரைந்து சென்று நிலத்தில் குறிப்பிட்ட இடத்தைத் தோண்டிப் பார்த்தனர்.

அங்கு பணமும் நகைகளும் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. (ஓ-எ)

## மனிதாபிமான ரீதியில் விஜயநாதனை விடுவிக்க பிரசைகள் குழு கோரிக்கை

திருகோணமலை, ஆக. 25

கடந்த 03ஆம் திகதி முதல் காணாமற்போன திருகோணமலை மாவட்ட பிரசைகள் குழுத் தலைவர் திரு. பா. விஜயநாதனை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு பிரசைகள் குழுவின் உப-தலைவர் வண. பிதா. நோபட் ஏ. ஒக்சஸ் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;-

திரு. பா. விஜயநாதன் நகராட்சி மன்றத்திலுள்ள எமது அலுவலகத்தில் சம்பவதினம் (3-8-88) கடமையில் ஈடுபட்டிருந்த வேளை பிற்பகல் இரண்டு மணியளவில் வெளியே சென்றார். அவர் மீண்டும் திரும்பவில்லை. அவர் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக திருகோணமலை மாவட்ட பிரசைகள் குழுத்தலைவராகவிருந்து இம் மாவட்டத்தின் தமிழ் பேசும் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றி வந்ததை எல்லோரும் அறிவார்கள்.

பல இக்கட்டான கால கட்டங்களில்கூட அவர் தமது உயிரையும் பணயம் வைத்து சில பணிகளை தமிழ் மக்களின் நன்மை கருதி செய்தார் அவற்றில் வெற்றியும் கண்டுள்ளார்.

தமிழ் மக்கள் அவரது தன்னலமற்ற சேவையைத் தொடர்ந்து பெறுவதற்கும், அன்னாரது வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறொருவரை பெறுவதற்கு இயலாமையாலும், அவரை அழைத்துச் சென்றவர்கள்மனிதாபிமான அடிப்படையில் அவரை விடுதலை செய்யுமாறு தயவுடன் வேண்டுகின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-150]

## கூட்டுறவுத்துறை இன்று நலிவுற்று இருப்பது ஏன்?

பண்டத்தரிப்பு ஆக 25

இலங்கையில் கூட்டுறவின் முன்னோடிகள் என்று பெயர் எடுத்தவர்கள் யாழ்ப்பாண மக்கள். இத்துறையில் பலவித சாதனைகளைப் புரிந்தவர்கள் நாம். ஆனாலும் எமது கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது நலிவு கண்டுள்ளன. ஏன் இந்நிலை?

நம்மத்தியில் கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கு மதிப்பு குறைகின்றமை- சட்டங்கள், விதிகள் மக்கள் மேம்பாட்டின் பொருட்டு ஆக்கப்பட்டவை என்பதை மறந்து தான்தோன்றித்தனமாக செயற்படுதல்- தேவையற்ற செயல்களில் காலத்தைக் கழித்தல்- என்பவையே எமது நலிவிற்கு காரணம்.

யாழ்ப்பாணம் தலைமைக்காரியலாயக் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. முருகையா பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க விசேட பொதுக்கூட்டத்தில் கலந்துரையாற்றுகையில் இப்படிக்குறிப்பிட்டார்.

எமது பொருளாதார சுபீட்சத்திற்கும் அபிவிருத்திக்கும்கூட்டுறவு இயக்கமே துணை.

சாதி, சமயஇன, மொழி பேதங்கள் அற்ற ஓர் அமைப்பு கூட்டுறவுஇயக்கம்.

கூட்டுறவில் ஒருவனுக்காக சமுதாயமும் சமுதாயத்திற்காக ஒருவனும் என்ற கோட்பாடு கடைப்பிடிக்கப்படும்வரை சமூகத்திற்கு அதனால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பே இல்லை- என்று அவர் மேலும் கூறினார்.

சங்கத்தலைவர் திரு.அ. யேசுதாசன் தலைமையில சங்கமண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. (உ-120)

தடுப்புக்காவல் கைதிகளைப் பொறுத்தவரை

## ஒப்பந்தம் மூலம் கிடைத்த நம்பிக்கை கனவாகி விட்டது

### ஜனநாயக வாலிப முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 25

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளைப் பொறுத்தவரை இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமக்கு விடுதலை வேண்டித் தரும் என்ற நம்பிக்கை கனவாகி விட்டது.

—இலங்கை ஜனநாயக வாலிப முன்னணியின் சார்பில் அதன் இணைச்செயலாளர் திரு. கா. கதிர்காமநாதன் விடுத்துள்ள அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'அரசியல் கைதிகளை விசாரணைக்கு நிறுத்த வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும்' எனக்கோரி பூஸாமுகாம் கைதிகள் நடத்திவரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.-

நாட்டின் பல்வேறு தடுப்பு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் இராணுவ முகாம்களிலும் நீண்ட நாட்களாக விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்குப் பரவலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

கடந்த காலங்களில் அவ்வாறான முயற்சிகளினாலேயே பலர் விடுவிக்கப்பட்டனர்.

வடக்கு, கிழக்கு மலையகப் பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை.

இளைஞர்கள், [illegible] போன்ற பல்தரப்பட்டவர்களும் எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாது. நீதிமன்றத்தில் நிறுத்தப்படாது, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நீண்ட நாட்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் அவர்கள் உடல் உள ரீதியிலான பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஜனநாயகம், மனித உரிமை சட்டத்தின் முன் சகலரும் சமம்என்ற வாசகங்கள் யாவும் இவர்களின் முன் வெறும் கதையாகவே உள்ளன. தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை மட்டுமன்றி, சிங்கள அரசியல் கைதிகளையும் விசாரணைக்கு நிறுத்த வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டுமென வற்புறுத்துகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


# VACANCIES IN SAUDI ARABIA

GOLDEN TRAVELS & TOURS

1. Work Scheduler SR 1100+100 FA
2. H v a c Split Units Central Technicians SR 900-1000+100 FA
3. A/C Technicians SR 700-800+100 FA
4. Appliances Technicians SR 800+100 FA

ஆங்கில அறிவும் Driving Licenceஉம் அவசியம் வேண்டும்.

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பிரயாணம் செய்யக் கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத்தவறின் கடவுச்சீட்டுத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

காரியாலயங்கள் அனைத்தும் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும் திறக்கப்படும்.

தலைமைக் காரியாலயம்:-

கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

கிளை 1: கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
குப்பிளான் சந்தி, குப்பிளான்.

கிளை 2: கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி.

(C 6320)


## மன்னார் மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடு

மன்னார், ஆக. 25

மன்னார் மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காகத் தொண்டர் ஆசிரியர்கள் சேவையில்சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

இதற்கான நடவடிக்கைகளை மன்னார் மாவட்டத்தின் புதிய கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். ஏ. எம். மொகதீன் மேற்கொண்டு வருகின்றார்.

அசம்பாவிதங்களின் போது உயிரிழந்த—அல்லது நாட்டை விட்டு வெளியேறிய அல்லது பதவி விலகிய ஆசிரியர்களின் இடங்களுக்குப் புதிதாக தொண்டர் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இத்தகைய காரணங்களினால் ஆசிரிய பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்கள் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பாடசாலைகளுக்கு கிட்டிய தூரத்தில் உள்ள— ஜீ.சி.ஈ. (உயர்தர)பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் சித்தியடைந்த— இளைஞர்கள், யுவதிகள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

நியமிக்கப்படும் தொண்டர் ஆசிரியர்களுக்கு சமூக சேவை அமைச்சின் மூலம் மாதம் ஒன்றுக்கு ஐநூறு ரூபா வழங்கப்படும்.

18 வயது முதல் 25 வயது வரையுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும்-

இச்சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவோர் நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றும்போது, அங்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி சித்திரத்தேர் சிறப்பு மலர் - (25 - 8 - 1988)


தேவியைப் போற்றினால்
தேவைகள் பூர்த்தியாகும்
★ தரமான சுத்தமான அறுசுவை உணவு வகைகளுக்கும்
★ சுவையான சர்பத் மற்றும் குளிர்பான வகைகளுக்கும்

**செல்வ விலாஸ்**
புகையிரத வீதி, சுன்னாகம்.

ஸ்ரீ துர்க்காதேவி அருள் கிடைக்க
இறைஞ்சுகின்றோம்!

**கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்**
மயிலணி, சுன்னாகம்.

தேரேறும் துர்க்கை அம்மன்
அருள் வேண்டி நிற்கின்றோம்!
✶ NESTLES (நெஸில்ஸ்) தயாரிப்புகள்
✶ எவர் - ரெடி பற்றறிகள்
✶ லிவர் பிறதர்ஸ் தயாரிப்புகள்
இவற்றின் விநியோக முகவர்கள்

**லக்ஷ்மிநாதன்ஸ்**
(GENERAL & HARDWARE MERCHANTS)
தெல்லிப்பழை.

ஓம் சக்தி
அபிராமி அந்தாதி தினமும் படியுங்கள்.
இந்நூலை மில்க்வைற் விளம்பர காட்சிச் சாலையில் பெற்றுக் கொள்ளுங்கள்.
நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும்:

**"மில்க்வைற்"**


## பக்தியுடையவருக்கு அருள் செய்ய பித்துடையவள் அன்னை துர்க்கை!

சைவ மக்களுக்கு அருட்பெரு நிலையங்களாக விளங்குவன திருக்கோயில்களே. "குறிகளும் அடையாளமும் கோயிலும்" என்பது மக்கள் பக்தியுடையவராயின் இறைவன் அவர்களுக்கு அருள் புரிவதில் பித்துடையனாகின்றான்.

அத்தகைய பித்துக்குக் காரணம் அம்பிகையின் அருள் நோக்கே என்பது

தமாகி
அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழி தடுமாறி முன்சொன்ன
எல்லாம்
தரும்பித்தராவரென்றால்
அபிராமி சமயம்

துர்க்காதேவி ஆலயத்தை அணிசெய்கிறது.

வேத ஓசையும், வீணையின் ஓசையும், இன்னிசை முழக்கமும் இயங்களின் நாதமும் எங்கும் பரவி அனைவரது உள்ளத்தை



எமது தியான வழிபாட்டுக்குரியவை. பக்திவெள்ளம் பரந்து பெருகுவதற்கு இவையே வழிகாட்டுவன.

இத்தகைய திருக்கோயில்களில் நடைபெறும் நித்தியநைமித்தியவழிபாடுகளினால் பக்தி பண்ணும் பாங்கு பெருகுகிறது.

அனைவரும் அறிந்த உண்மை.

விரும்பித்தொழுமடியார்
விழிநீர் மல்கி மெய்
புளகம்
அரும்பித் ததும்பி ஆனந்

நன்றே!"
—என்று பாடுகிறார் பட்டர் பெருமான்.

இப்படியான ஒரு பித்துக் கொண்ட பெருங் கூட்டம் தெல்லிப்பழை

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி** ஜே.பி
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்)

யும் ஆனந்தமடையச் செய்யும் இடமாகத் "துர்க்காபுரம்" அமைந்து விட்டது.

"கரங்குவித்தோம்இனிக்
காலைவிடோமடி
கருணையுடன் அணைப்
பாய்"
—என்று காலையும் மாலை

(7 ஆம் பக்கம் பார்க்க)


வற்றாத கருணை வெள்ளம் எப்போதும்
தந்தருளும் துர்க்கா துரந்தரியே
தேர்மீது வருக வருகவென வாழ்த்துகிறோம்.

**MURUGAN AUTO HOUSE**
Dealers in
ELECTRICALS ACCESSORIES
& Electrical Contractors
K. K. S. Road, Tellippalai.

துர்க்கை அம்மன் சித்திரத் தேர் ஏறும்
காட்சி காண வாரீர்!
குறைந்த சலாரில் எண்ணெய் வடித்துப் பெற்றுக்கொள்ள

**மல்ரி-ஒயில்**
**இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்**
**OIL MILLERS**
காங்கேசன்துறை வீதி, இணுவில்.
(இணுவில் ஆஸ்பத்திரி முன்புறம்)

தேரேறும் தேவியைப் போற்றிடுவோம்.

**ROYAL LUBRICATION SERVICES,**
K. K. S. Road, Chunnakam.

"தேவியைப் போற்றுவோம்
தேறுதலடைவோம்."

**'GRIFFTOS'**
K. K. S. Road,
Tellippalai.

*We never know where business will take you*
*But we are sure that*
**"LANKA CEMENT"**
*will take you to build a*
**"SWEET HOME"**
HEAD OFFICE:
**M/S LANKA CEMENT LTD.**
130, W. A. D. RAMANAYAKE MAWATHA, COLOMBO 2.

தரத்திற்கும் உறுதிக்கும்
**"லங்கா சீமெண்ட்"**
நாம் சொல்லுகிறோம் பாவனையாளர்கள்
உறுதிப்படுத்துகிறார்கள்.
Lanka Cement
**லங்கா சீமெண்ட் லிமிட்டெட்**
கீரிமலை வீதி, காங்கேசன்துறை.

THE LUMALA CYCLE
LUMALA

எல்லாமே தானாகி, எதற்கும் அப்பால் நிற்கும் ஆயிரநாமக்காரி
தெல்லிப்பழை தாயார், தீமைகளைப் பட்சித்து தூயவரை ரட்சிக்க
திருக்கோவில் வீதியிலே தேரிலின்று வருகின்றாள்!

ஏக விநியோகஸ்தர்கள்:
● LUMALA (லுமாலா) சைக்கிள்கள்
● EASTERN (ஈஸ்ரேன்) சைக்கிள்கள்
● RONSON (ரோன்சன்) சைக்கிள்கள்
● HERO (ஹீரோ) சைக்கிள்கள்
● ROMA (ரோமா) சைக்கிள்கள்

மற்றும்:
✶ லோட்டஸ் (Lotus) சைக்கிள் ரயர், ரியூப்
✶ சைக்கிள் உதிரிப் பாகங்கள்
✶ அன்ரனா பொருத்துவதற்குத் தேவையான உபகரணங்கள்
✶ நவீன அன்பளிப்புப் பொருட்கள்
✶ பாடசாலை உபகரணங்கள் – விற்பனையாளர்கள்

**இ. சுப்பிரமணியம் அன் கோ.,**
இல. 8 கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி சித்திரத் தேர் சிறப்பு மலர் (25 - 08 - 1988)★

"தேவியைப் போற்றுவோம்
தேறுதலடைவோம்"

**விஜயா ஹாட்வெயர்ஸ்**

**Vijaya Hardwares**
**K. K. S. ROAD.**
**MALLAKAM.**

" அம்பிகையைச் சரணடைந்தால்
அதிக வரம் பெறலாம்"

**சைலை ரெக்ஸ்**

**Fancy Goods & Tex**
**Sailai Tex**
Main Road, Tellippalai.

வற்றாத கருணை எப்போதும் பொழியும்
துர்க்கா துரந்தரியே தேர் மீது வருக! வருக!
★ மின்சார உபகரணங்கள்
★ சைக்கிள் உதிரிப்பாகங்கள்
★ மின்சார மோட்டர் பம்புகள்
விற்பனையாளரும் ஒப்பந்தகாரரும்

**ஹப்பி எலெக்றிக்கல்ஸ்**
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

"துர்க்கையைத் துதிப்போர்க்கு
துன்பமேயில்லை"
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்.

**முருகன் ஆபரண மஹால்**
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

அம்பிகையைச் சரணடைந்தால்
அதிக வரம் பெறலாம்

**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
சுன்னாகம்.

# துலையத்தில் கவலை தீர்க்கும் தெல்லிநகர் துர்க்காதேவி!


"துயரெல்லாம் தீர அருள் செய் அம்மணி தெல்லிநகர் திருப்பதியில் வாழும் துர்க்காதேவியே" என்று பழைய பாடல் ஒன்று உண்டு.

ஆங்காரம் போக்க வந்த மூர்த்தம் அம்பிகையின் துர்க்கா தோற்றம். அன்று அசுரனை அழித்தாள் இன்றும் அசுரரை அழிப்பாள்.

ஓங்காரப் பிரணவ முதல்வனுடன் ஆவணித் திங்கள் உத்தர நட்சத்திரம் திரயோதசித் திதியில் சிங்கத்தின் மீதமர்ந்து நிற்க துர்க்கா திருத்தலக்கொடி ஏற்று வைபவத்தின் போது அன்னையின் கடைக்கண்ணோக்கையே சருத்தில் கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் விமோசனம் வேண்டியபடி வழிபடுவார்கள்; தொழுது அழுவர் சிலர்; சிலர் அழுது தொழுவர்; எல்லோரும் கைதொழுவர்.

மேலான யாகமாம், விழாவானது திருக்கோயில்களில் நிகழும் பொழுது ஆன்மாக்களின் ஆனந்த வாழ்வுக்கு அடிகோலப்படும். மும்மல நீக்கமுண்டாக, முத்திப்பேறு அருளலாகும். எனவே கொடி ஏறியதுடன் ஒவ்வொரு நாளும் இந்த நீக்கங்கள் நிகழ்ந்து ஈற்றில் அருளல் பேறாக உறுகின்றது.

புவனம் பதின்நான்கையும் பூத்தவள், அந்நிலையில் ஆன்மகோடிகளைக் காப்பாள் என்ற உறுதியுடன் நிகழும் பெருந் திருவிழாக்களால் ஊருக்கும், நகருக்கும், நாட்டுக்கும் ஏன் உலகம் முழுவதற்குமே வளம் பெருக்கும்.



துர்க்காதேவி திருத்தலத்தில் நிகழும் எல்லா விழாக்களும் பேரானந்தம் தருவன. புனிதமே மயமாகியமைந்த இத்தலத்திலே சிவாசாரியர்கள், வேதசிவாகம வித்தக உத்தமர்கள் கிரியைகளை நன்கு புரிந்து கிரமமாக நிறுத்துவர். துணையாகவுள்ள அந்தணப் பெருமக்கள் கருமமே கண்ணாயிருப்பர்.

திருமுறை ஓதும் அருந்தவ சீலர்கள் பக்திமயமாகுவர். பண்ணிசைப் பணியால் இசையாளர்கள் தம்மை மறந்து இன்பத்தோடியைந்த வண்ணம் நாதம் எழுப்புவர்.

இளைய வித்துவர் தாளநிலை தவறாமாட்டார்கள். சங்கநாதம் சிங்க ஒலியாக மிளிரும்; பேரிகையும் சீரிய வண்ணம் முழங்கும்.

மலர்மாலை புனையும் மங்கையர் மங்கையர்க்கரசியாம் துர்க்கை அன்னையை மகிழவைப்பர்; அழகிய கோலமிட்டு எழிலமைப்பர்.

திருத்தொண்டர்கள் உழவாரப்பணி முதலாக எப்பணியும் எந்நேரமும் இதயபூர்வமான அர்ப்பணிப்பாக கடமை ஆற்றுவர்.

கற்பூர சோதி மயமாகச் சோடோபசார விசேடங்களுடன் வசந்த மண்டபத்தில் அசைந்து எழுவாள் துர்க்கை.

அடியார்களுக்கு அன்னையின் அருட்பிரசாதத்துடன் அன்னபூரணியில் நன்காமையும் மகேஸ்வர பூசை எல்லாம் இன்பமயமாக இருக்கும்.

தேவஸ்தான நிருவாக நெறிச்சீர் தேவலோக எழிலில் அமைந்திருக்கும்.

எனவே ஆயிரம், பல்லாயிரமாக அடியார்கள் துர்க்காதேவியின் பெருந்திருவிழாக்களைக் கண்டுகளிப்பர்— எல்லா விழிகளும் தெல்லித் துர்க்காபுரத்தையே நோக்கும்.

**தேரேறும் திருநாளில்**
**துர்க்கையம்மன்**
**அருள் வேண்டி**
**இறைஞ்சுகின்றோம்!**

**காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை**

காங்கேசன்துறை.

வாழியவள் திருத்தேர்
வளர்க அவள் புகழ்.

**கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

தேவி தேரேறும் இன்று அடியார் அகம்
மலரும் நாள்

**தெல்லிப்பழை**
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**தெல்லிப்பளை.**

அன்னையின் எழிலில் அகிலமும்
மகிழ்கிறது.
சகல தரமான கடைச்சல் வேலைகளுக்கு

**தயா மரக்காலை**
கே. கே. எஸ். றோட்,
சுன்னாகம்.

தேரேறும் அம்பாளைப்
போற்றுவோம்.
உள்நாட்டு வெளிநாட்டு ஆங்கில
மருந்து வகைகளுக்கு
நாடவேண்டிய ஸ்தாபனம்.

**இந்திரபாலாஸ் பார்மசி**
108. K.K.S. Road, சுன்னாகம்.

**தேரேறி வருகின்ற தேவி துர்க்கையம்மனின் இன்னருள் நாடி இறைஞ்சுகின்றோம்!**

✶ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
✶ திருமண விழாக்கள்
✶ புதுமனைப் பிரவேசம்
✶ புதுமனைக்கு அத்திவாரமிடல்

முதலிய வைபவங்களுக்குத் தேவைப்படும்
✶ அபிஷேகத் திரவியங்கள் ✶ விளைவு சூடம் ✶ சாம்பிராணி ✶ ஊதுபத்தி ✶ வாசனைதிகள்
முதலிய சகல பொருட்களும்
✶ சந்தனம் ✶ குங்குமம் ✶ சுத்தமான பசு நெய்
முதலியனவும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.
சவ்வரிசி, சேமியா, நெல்லிகிறஷ், பாதாம் பருப்பு, பச்சைச்சந்தனம், சித்த ஆயுர்வேத மருந்துகள், கோரோசனை, கஸ்தூரி, குங்குமப் பூ, மருந்துச் சரக்குகள்
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.
வைத்தியர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் வழங்கப்படும்.

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22541

160, செட்டியார் தெரு, கொழும்பு 11.
தொலைபேசி: 35825

வையமொடு வானையும் காக்கும் பராசக்திதாயே, துர்க்காதேவி, அல்லல்பட்டு ஆற்றுது அழும் அடியவர் கண்ணீரை எல்லாம் துடைத்து அவர்க்கு இக பர சுகமருள வேண்டுகின்றோம் - இறைஞ்சுகின்றோம்.

**19-8-88 தொடக்கம் எமது போட்டோஸ்ரற் பிரதி சேவை**

**சுன்னாகம் கே. கே. எஸ். வீதி**
**(சுன்னாகம் சந்திக்கு அருகாமையில்)**

**★ காயத்ரி கிப்ற் சென்ரர் ★**

என்னும் எமது சகோதர நிறுவனத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
கணப்பொழுதில் தரமான பிரதிகள், அன்பான உபசரிப்பு, மின்துண்டிப்பு நேரத்திலும் தடைப்படாத சேவை.

★ 19-8-88 தொடக்கம் பிரதி ஒன்றுக்கு 25./ விலைக் கழிவினை வழங்கி வருகிறோம்.
★ கூடுதலான பிரதிகளுக்கு மேலும் விசேட விலைக் கழிவு.

சேவை நேரம் தினசரி காலை 7-00 மணி தொடக்கம் மாலை 6 00 மணி வரை.

✶ அன்புடன் அழைக்கின்றோம்.

**இ. சுப்பிரமணியம் அன் கோ.,**
இல. 8, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டு மைல் நடந்த பெண் விவசாயிக்கு ஏற்பட்ட ஏமாற்றம்

கொடிகாமம், ஆக25

விவசாய அழிவு நிவாரணப் படிவம் பெறச் சென்ற பெண் விவசாயி ஒருவர், இரு தடவைகள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

சம்பந்தப்பட்ட பெண் விவசாயி விவசாயத்தோடு கூடிய ஒருவரிடம் விவசாய அழிவு நிவாரணப் படிவம் பெறச் சென்றிருந்தார். அந்தச் சமயத்தில் அந்த உத்தியோகத்தர் கடமையில் கண்ணுயிராமல் நித்திரையில் கண்ணுயிருந்தாராம்.

ஒருநாள் காலை 8.30 மணிக்கு அந்த அதிகாரியைக் காணச் சென்றபோது, அவர் வெளியே சென்றிருப்பதாகச் கூறப்பட்டது.

மீண்டும் அன்று பிற்பகல் 2.30 மணியளவில் அந்தப் பெண்மணி அதே உத்தியோகத்தரைப் பார்க்கச் சென்றார்.

அவரது வீடும் அலுவலகமும் ஒன்றாகவே இருந்தது. அங்கேயிருந்த அந்த உத்தியோகத்தரின் மனைவி அந்தப் பெண்மணியைப் பார்த்து அவரது உறக்கத்தை நான்கு மணிக்கு முன் குழப்ப முடியாது என்று பதிலளித்தாராம்.

அந்தவேளையில் நித்திரையிலிருந்து எழுந்த அந்த உத்தியோகத்தர் பெண்மணியைப் பார்த்து, நான்கு மணிக்கு வருமாறு கூறிவிட்டு மீண்டும்படுத்துக்கொண்டாராம்

இப்படியான உத்தியோகத்தர்கள் இருக்கும் போது எமது விவசாயம் எப்படி வளர்ச்சியடைய முடியுமென்று பாதிக்கப்பட்ட பெண் விவசாயி உதயன் செய்தியாளரிடம் கவலை தோய்ந்த முகத்துடன் தெரிவித்தார். இவர் தென்மராட்சியில் வசிப்பவர்

(ஒ-ஐ-75)

அகதிகளுக்கான நிவாரண உதவி

# பிரதான குடியிருப்பாளரே செயலகம் செல்லவேண்டும்

இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகள் தமது பொருளாதார முயற்சியை ஆரம்பிக்க ஏதுவான நிவாரண உதவிகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள பிரஸ்தாப குடும்பத்தின் பிரதான குடியிருப்பாளர் மட்டுமே யாழ். செயலகம் வரவேண்டும்.

இவ்வாறு யாழ் அரச அதிபர் நேற்று விடுத்த பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி உதவிகளைப் பெறுவதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் பின்வரும் முறையில் வழங்கப்படவுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் 15, 16ஆம் திகதிகளில் நாடு திரும்பிய அகதிகளுக்கு முறையே இம்மாசம் 26, 27ஆம் திகதிகளிலும் - மே மாசம் 7ஆம் திகதி நாடு திரும்பியவர்களுக்கு இம்மாதம் 28ஆம் திகதியும் பிரஸ்தாப நிவாரணத்துக்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ் செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 9 மணிமுதல் 12 மணி வரை மட்டுமே இவை விநியோகிக்கப்படும்

இவ்வாறு பெறப்பட்ட படிவத்தைப் பூர்த்தி செய்து கிராமசேவை அலுவலர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரின் சிபாரிசுகளுடன் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

மே மாதம் 14ஆம் திகதிக்குப் பின்னர் நாடு திரும்பிய அகதிகளுக்கான பிரஸ்தாப விண்ணப்பப்படிவ விநியோகம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பதவி வெற்றிடம்

இப் பல்கலைக்கழகத்தில் கீழ்க்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் செப்டம்பர் மாதம் 19ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி:

ஆய்வுகூடக் கவனிப்பாளர் (தாழ் தரம்)

சம்பளத்திட்டம்;

ரூபா 1340 - 4x20: 5x30 - 1570 மாதமொன்றிற்கு

கல்வித்தகைமைகள்:

எட்டாம் வகுப்பிற் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:

ஆய்வுகூட உபகரணங்கள், செய்முறைக் கருவிகள், பொதுவாகப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் பற்றிய அறிவுடையோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது: 40 வயதிற்கு மேற்படலாகாது.

தெரிவு:

உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையிலிருந்து விண்ணப்பப் படிவங்களை நேரிலும், 23×10 ச.மீ அளவுடைய முகவரியிடப்பட்ட முத்திரையொட்டப்பெற்ற கடித உறையை அனுப்புவதன் மூலம் தபாலிலும் பெற்றுக்கொள்ளலாம்

—பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்

16-08-1988. (C-6329)


# அப்பாவிப் பொதுமக்களைத் தாக்குவதையும் படுகொலை செய்வதையும் தடுத்து நிறுத்துங்கள்

## யாழ் மக்கள் சார்பில் ராஜீவ் காந்திக்கு மனு

யாழ் நகர மக்களாகிய நாம் இந்திய அமைதிப்படையினரின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினால் அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாகக் கொலைசெய்யப்படுவதையும், துன்புறுத்தப்படுவதையும் கடுமையாக ஆட்சேபிப்பதுடன் இவ்வாறான பாதிப்புகளிலிருந்து எம்மைப் பாதுகாக்கும்படியும் தங்களிடம் விண்ணப்பித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீலங்கா அரசபடைகளால் எமது மக்கள் கொலைசெய்யப்பட்டு உடைமைகள் அழிக்கப்பட்டபோது தாங்களும் தங்கள் நாட்டு மக்களும் கடுமையான கண்டனத்தையும், ஆட்சேபனையையும் தெரிவித்தார்கள். எமது மக்கள் தங்களையும் தங்கள் நாட்டு மக்களையும் சகோதரர்களாகவும் எம்மைக் காப்பாற்றிக் கைகொடுப்பவர்களாகவுமே கருதுகிறார்கள். ஆனால் எம்மைக் காப்பாற்றவென வந்த அமைதிப்படையினரின் நடவடிக்கைகள் சில சந்தேகங்களை எழுப்பியுள்ளன.

> கடந்த 18ஆம் திகதி யாழ் நகரில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.
>
> குருநகர் மக்கள் பாஷையூர் கடற்றொழிலாளர் சங்கம், அன்னையர் முன்னணி, சென் பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆகியோர் சார்பிலும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் மற்றும் முக்கிய பிரமுகர்களின் ஒப்பத்துடனும் இந்த மகஜர் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.
>
> யாழ் அரச அதிபர் மூலம் இந்தியப் பிரதமருக்கு இந்த மகஜர் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

உதாரணமாக கடந்த வியாழக்கிழமை 18-08 88 அன்று யாழ் மாநகர சபை எல்லைக்குள் நடந்த படுகொலைகள் சம்பவத்தைவிபரிக்க விரும்புகிறோம்.

அன்றையதினம் காலை அமைதிப் படையினர் ரோந்து சென்ற வாகனம் ஒன்றின் மீது கச்சேரி நல்லூரர் வீதியிலுள்ள பேச்சி அம்மன் கோவிலுக்கு அண்மையில் கைக்குண்டு வீசப்பட்டதாகவும், இதில் சில அமைதிப் படையினர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது.

### துப்பாக்கிப் பிரயோகம்

இதைத் தொடர்ந்து அந்த இடத்தில் பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அங்கிருந்து தமது யாழ் கச்சேரி முகாமுக்குத் திரும்பிய அமைதிப் படையினர், பின்னர்வேறு சில அமைதிப்படை வாகனங்கள் சகிதம் கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ் நகரை நோக்கி வேகமாகச் சென்றனர். செல்லும் வழியெல்லாம் வீதியோரங்களில் காணப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் சென்றனர். அந்த நேரம் ஆஸ்பத்திரி வீதியில் தனது வீட்டின் முன்பாக சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் திரு. ஜேம்ஸ் அருமைநாதன், தனது முன்னைய மாணவனும் பேராதனைப் பல்கலைக்கழக இறுதியாண்டு பொறியியல் பீட மாணவருமான திரு. அந்தோனிப்பிள்ளை புறாஞ்சு கிறிஸ்ரி என்பவருடன் பேசிக்கொண்டு நின்றுள்ளார்.

அமைதிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இவர்கள் இருவரும் அந்த இடத்திலேயே துப்பாக்கிக் குண்டினால் சிதறடிக்கப்பட்டு மரணமானார்கள். இதற்கப்பால் சில யார் தூரத்தில் பசுபதிப்பிள்ளை என்ற வயோதிபரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார். இதனைத் தவிர வேறு பலரும் படுகாயமடைந்துள்ளார்கள். மேலும் பலர் மயிரிழையில் உயிர் பிழைத்தனர்.

### வேல்பாய்ச்சும் செயல்]

இந்தப் படுகொலை நாடகத்தை நடத்தி முடித்த அமைதிப்படையினர் இதுபற்றிப் பத்திரிகைகளுக்கும், தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றிற்கும் வழங்கிய செய்தி அறிக்கை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது.

விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டதாக இந்திய வானொலியும் தொலைக் காட்சியும் தங்கள் செய்திகளில் முதலில் அறிவித்தனர். பின்னர் சிறிது மாற்றம் செய்து விடுதலைப் புலிகளுக்கும் அமைதிப் படையினருக்குமிடையில் நடந்த மோதலில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எனக் கூறியது. இப்படியாக பொதுமக்கள் கொல்லப்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் உண்மையைத் திரித்துக் கூறி தாங்கள் செய்யும் படுகொலைகள் எல்லாவற்றிற்கும்போராளிகள் மேல் பழிசுமத்துவது அமைதிப்படையினரின் வழக்கமாகிவிட்டது.

முன்னர் ஸ்ரீ லங்கா அரச படைகள் இப்படிச் செய்தபோது நாங்களும் தங்கள் நாட்டு மக்களும் அந்த உண்மைக்குப் புறம்பான செய்தியை வன்மையாகக் கண்டித்திருக்கிறீர்கள்.

### பழி சுமத்தல்

ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் அமைதிப் படை மேற்கொண்ட தாக்குதல்களின் போது பெருமளவில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். யாழ்ப்பாணப் பிரதான வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிமார்கள், வைத்தியசாலை ஊழியர்கள், நோயாளிகள், பொது மக்கள் என பெருமளவில் படுகொலை செய்யப்பட்டனர். அப்போது முதல் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அமைதிப்படையினரின் நடவடிக்கைகளால் தொடர்ச்சியாக அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். அப்படிக் கொல்லப்படும் அப்பாவிகள் ஏதோ ஒரு வகையில் போராளிகளுடன் சம்பந்தப்படுத்தப்பட்டு பழிவேறு யார் மீதோ சுமத்தப்படுகின்றது.

மாண்புமிகு பிரதமர் அவர்களே!

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் பலவகையிலும்பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு வந்த தமிழ் மக்கள் தங்கள் நாட்டையும் தலைவர்களையும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு விமோசனம் பெற்றுத் தரக்கூடியவர்களாகவே கருதி வந்துள்ளார்கள். இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்திற்கு துரதிர்ஷ்டவசமாக இலங்கைத் தமிழர்கள் ஒருபகுதியினராக உள்ளடக்கப்படாத போதிலும் ஒப்பந்தத்தைச் சகலரும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகளாலும், இடையில் ஏற்பட்ட தப்பபிப்பிராயங்களாலும் முக்கிய போராளிகள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இதனால் ஏற்பட்ட பேரிழப்புகளின் மத்தியிலும் தமிழ் மக்களின் நீண்ட கால துன்பங்களினாலும் அவர்கள் இன்னமும் தங்களையும் இந்திய மக்களையுமே விமோசனத்திற்கும் விடிவுக்குமாக நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள்.

### அப்போது....,

அமைதிப்படையினர் இங்கு வந்திறங்கிய போது தங்கள் துன்பங்கள் எல்லாவற்றிற்கும் முடிவு வந்துவிட்டதாக எண்ணி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றார்கள் தமிழ் மக்கள். தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பளித்து அவர்களது உரிமைகளையும் பாரம்பரிய பிரதேசங்களையும் மீட்டுக் கொடுப்பதற்காகவே அமைதிப்படையினர் இலங்கை வந்துள்ளார்கள் என பெருமளவு பிரசாரம் செய்யப்படுகின்றது.

ஆனால், அமைதிப் படையினரின் நடவடிக்கைகள், இந்திய அரசாங்கத்தின் போக்கு தமிழ் மக்களின் மனதில் சந்தேகத்தை எழுப்பியுள்ளன. சிங்கள இலங்கை இராணுவத்தினரைப் போல் இவர்களும் எம்மைக் கொடுமைப் படுத்தவே செய்கிறார்கள் என்ற எண்ணம் உதயமாகி வலுவடையத் தொடங்கியுள்ளது. அமைதிப் படையினர் தமிழ் மக்களை அடிமைகள் போல் நடாத்த முற்படுகின்றனர்; கைது செய்யப்பட்ட பலர் பிணமாக மீட்கப்பட்டுள்ளனர்; இன்னும் பலர் காணாமல் போயுள்ளனர்; தடுத்து வைக்கப் படுபவர்கள்சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

உலகத்திலே நான்காவது பெரும்படையினர் ஒழுக்கம் கட்டுப்பாடு உள்ள இராணுவம் எனப் பெருமை பேசுவர்கள், போராளிகளினால் தாக்குதலுக் குள்ளாகும் போது அப்பாவிப் பொது மக்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் விதத்தில் கட்டுப்பாடுகளைமீறி பெரும் தாக்குதல்களை நடத்துகிறார்கள். தங்களைத் தாக்குபவர்களைத் திருப்பித் தாக்குவதற்கு அமைதிப்படையினர் உரித்துடையவர்களே. ஆனால், அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடாத்துவது, படுகொலைகளைச் செய்வது எந்த விதத்திலும் அனுமதிக்கப்படக்கூடாது.

அமைதிப்படையினரின் நடவடிக்கைகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கியுள்ளார்கள். பரவலாகப் பேசப்படுவது போல் இந்தியா தனது நலன்நோக்கமாகவே இலங்கையை ஆக்கிரமித்துள்ளது என்றஎண்ணம் அதிகரித்து வருவது தவிர்க்க முடியாமல் போகும் இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, தங்கள் வசதியின் பொருட்டுத் தமிழ் மக்களைப் பலமிழக்கச்செய்து சிங்கள ஸ்ரீ லங்கா அரசின் அடிமைகளாகத் தமிழ் மக்களைத் தொடர்ந்து இருக்கச் சதி செய்கின்றதோ எனசந்தேகங்கள் கிளப்பப்பட்டுள்ளன. இருப்பினும் இன்னமும் பெரும்பான்மையானமக்கள் தங்களையும், தங்கள் நாட்டு மக்களையும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள். இழந்த தங்கள் உரிமைகளையும், பாரம்பரிய பிரதேசங்களையும் மீட்டுத் தருவார்கள் என நம்பிக் காத்திருக்கிறார்கள்.

### காப்பாற்றுங்கள்

இலங்கைத் தமிழர்கள்வெறும் உறுதிமொழிகளை நம்பத் தயாராக இல்லை. கடந்தகால அனுபவங்கள் இந்த மனநிலையை உறுதியாக்கிவிட்டது. தீர்க்கமான செயல் வடிவங்களையே ஏற்றுக் கொள்வார்கள். வன்செயல்களை அவர்கள் என்றுமே ஆதரித்தவர்கள் அல்ல. அமைதியான வாழ்க்கை முறையைப் பெரிதும் மதித்து விரும்பி வாழ்ந்து வந்தவர்கள். தெ[illegible] அவர்கள் மீது சட்டவிழ்த்து விடப்பட்ட சிங்களப் பேரினவாதப் படுகொலைகளும், தாக்குதல்களுமே தமிழ் இளைஞர்களைவேறு வழியின்றி ஆயுதப் போராட்டத்திற்கு இட்டுச் சென்றது.

மாண்புமிகு பிரதமர் அவர்களே!

அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களை இனிமேலும் அமைதிப் படையினர் காவு கொள்ளாத விதத்தில் எமது உயிர்களைக் காப்பாற்றுங்கள் அதற்கான கட்டளைகளை வழங்கி அமைதி ஏற்பட வழி செய்யுங்கள் என உங்களைப்பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தவறான செய்திகளை நேர் செய்யும் நோக்கத்தோடு இந்த மகஜரின் பிரதிகளைப் பத்திரிகைகளுக்கும், தகவல்சாதனங்களுக்கும் வெளியிடுகின்றோம். (உ)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக25

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் அஷ்டோத்திர சத - சங்காபிஷேகமும், மணவாளக்கோல உற்சவமும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-சி)


## நினைவஞ்சலி



திரு. சின்னத்தம்பி நடராசா

(மலாயன் பென்ஷனர்)

மண்ணில்: 1910 —07—26

விண்ணில்: 1986—09—15

ஈராண்டு போயினவே, நீ பிரிந்து

நின் நினைவு ளோ—

நூறாண்டு நாம் வாழினும்

உயிர்வாழும்.

மனைவி,

உற்றார், உறவினர்,

"நடராஜ் மன்றம்"

கே. கே. எஸ். றோட்,

இணுவில்.

(C 6328)


# கசூரினா பீச்சுக்குச் செல்வோருக்கு இப்படி ஒரு வேண்டுகோள்

காரைநகர், ஆக. 25

காரைநகர், கசூரினா பீச்சுக்கு உல்லாசப் பயணம் செல்ல வேண்டாம் என கேட்கப்பட்டுள்ளது.

"அமைதியற்ற பீதி நிறைந்த காலமான இவ்வேளையில் அங்கு பொழுது போக்குவது என்பது இருள் சூழ்ந்த நிலையை மறைக்கச் செய்வதற்கு ஒப்பாகும்.

"ஆதலால் அன்பான தமிழ் ஈழ மக்களே! எதிர்காலம் வளமிக்க காலமாக மலர இன்றைய நிலையை சிந்தித்து நடவுங்கள்".

இப்படிக்கோரும் வாசகங்கள் கசூரினா பீச்சுக்குச் செல்லும் வீதியின் [illegible] பொறிக்கப்பட்டுள்ளன. (ஒ-73)

தற்போதய இக்கட்டான நிலையில்

# ஐக்கிய சோஷலிச ஆட்சி அமைப்பதன் மூலமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும்

கொழும்பு ஆக 25

தற்போதுள்ள இக்கட்டான நிலையில் ஐக்கிய சோஷலிச ஆட்சி ஒன்றை அமைப்பதன் மூலமாகவே இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

நவ சமசமாஜ கட்சி வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

எந்த ஓர் இனவாத சக்தியுடனும் கூட்டுச் சேராது சகல முற்போக்கு சக்திகளையும் ஒன்று திரட்டி ஐக்கிய சோஷலிச அணியின் கீழ் ஒன்று சேர்த்து இந்த அரசாங்[illegible]ருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் தமிழ்மக்களின் உரிமைகளைப்பாதுகாப்பதற்காக இந்தியப் படைகளையும் வாபஸ் பெறவேண்டும்.

தற்போது நாட்டின் தென்பகுதியில் மாகாண சபைகள் அமைக்கப்பட்டிருந்த போதிலும், மாகாண சபைச் சட்டத்தில் இருக்கும் அதிகாரங்களை இந்த அரசாங்கத்தால் அவற்றுக்குப் பகிர்ந்தளிக்க முடியாமல் இருக்கிறது.

இப்படியான நிலையில் அரசாங்கத்தின் நல்லெண்ணத்தில் தமிழ் அமைப்புக்கள் நம்பிக்கை வைக்கும் என்று எதிர்பார்ப்பது பயனற்ற ஒரு செயலாகும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ-ஐ)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 01 - 01 - 1941

மறைவு: 25 - 08 - 1987



திருமதி சாறம்மா ஜோன்

ஓராண்டு மறைந்ததம்மா உங்கள் அன்பின்

ஒளி பொழியும் தங்கமுகம்

மறந்தோமில்லை

நீராண்ட கண்களுடன் நெஞ்சம் வெந்து

நீறாகி நடைப்பிணம் போல்

வாழுகின்றோம்.

சீராண்டு நாம் வாழக் கனவு கண்டோம்

சிறகொடிந்த பறவைகளாய்த்

துடிக்கின்றோமே.

ஏராண்ட தவப்பிறப்பே இறைவன் வீட்டில்

இருக்கின்றாய் நிச்சயமாய்ச்

சந்திப்போம் நாம்.

பிரிவால் உருகும்,

துணைவனும், பிள்ளைகளும்,

உறவினரும்.

(5823)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்,

**பொருள்:**

(படையெடுத்துப்) போர்செய்யச் செல்பவர்க்கும் அரண் சிறந்ததாகும்; (படையெடுத்தவர்க்கு) அஞ்சித் தன்னைப் புகலிடமாக அடைந்தவர்க்கும் அது சிறந்ததாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி. தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22073
25 08-1988　　த. பெ. இல. 23


## போக்குவரத்துக்குத் தடையா?

யாழ்ப்பாணம் - கொழும்பு தனியார் பஸ் சேவைகளைத் தடை செய்வது குறித்து போக்குவரத்து அமைச்சின் உயர் மட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி.

தனியார் பஸ் வண்டிகள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடுவதற்காக, வழங்கப்பட்ட வீதிப் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை ரத்துச் செய்வது குறித்தும் பிரஸ்தாப அமைச்சு அதிகாரிகள் தீவிரமாக ஆராய்வதாகவும் தகவல்.

இத்தகைய தீவிர நடவடிக்கையில் அரசாங்கம் இறங்குவதற்கு அல்லது "வெப்பியாரம்" கொள்வதற்குக் காரணம் என்ன?

வடபகுதிக்கான குறிப்பாக கொழும்பு-யாழ் ரயில் சேவை நடைபெறுமல் தடுப்பதில் தனியார் பஸ்காரர்களுக்குப் பங்குண்டு என்ற சந்தேகமாம். இது சந்தேகமாகவே கூறப்படுகின்றதே அன்றி ஆதார பூர்வமானதாக இதுவரை அறிவிக்கப்படவில்லை.

சில வேளை, வேறு சில காரணங்களுக்காக, பழியைத் தனியார் பஸ்காரர் மீது சுமத்தி தங்கள் இலக்கை அடைவதற்காகச் சில புத்திசாலி அதிகாரிகள் உருவாக்கிய 'சந்தேக'மாகவும் இது இருக்கக்கூடும்.

எனினும் இந்தச் "சந்தேகம்" குறித்தோ அல்லது அது ஆதார பூர்வமானதோ இல்லையோ என்பது குறித்து ஆராய்வதோ வாதிடுவதோ எமது நோக்கமல்ல.

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை: திறந்த கொள்கை. தனியார் துறையும் அரசாங்கத்துறையும் போட்டிபோட அனுமதிக்கும் கொள்கை.

மேலும், செயலளவில், நடைமுறையில் தனியார் துறையை அரசு வளர்த்து வருவதைக் காண்கிறோம். அரசாங்க நிறுவனங்கள் பலவும் நட்டத்தில் இயங்குவதாகக் கூறி தனியார் வசம் ஒப்படைக்கப்படுகின்றன.

ஆசப் பிந்தி, தனியார் மயப்படுத்தல் பிரதான கொள்கையாகக் கொள்ளப்பட்டு அதற்கெனத் தனிப்பிரிவும் உருவாக்கப்பட்டிருக்கிறது! தனியார் மட்டுப்படுத்தலால் ஏற்படக்கூடிய "நன்மைகளை" விளக்கி ஏகப்பட்ட பிரசாரமும் நடக்கிறது!!

அப்படியிருக்க, கொழும்பு - யாழ் பஸ் சேவைத் துறையை மட்டும் கழுத்தில் பிடித்து நெரிக்க அரசு முயல்வது ஏனோ? ஏனைய துறைகளைப் போலவே தெற்குக்கு ஒரு நீதி, தமிழர்களுக்கு மற்றொரு நீதி என்ற அதே பல்லவி தானோ?

தனியார் துறை பஸ் சேவையாளர்கள் அதிக கட்டணம் வசூலித்தால் அந்த அநியாயத்தைப் போக்க வேண்டும் என்பதில் தவறில்லை. பிரயாணிகளுக்கு உரிய வசதிகள் செய்யப்படவில்லை, அவர்களுடன் கண்ணியமாகவும், பண்பாகவும் நடக்கவில்லை என்ற குறைபாடுகள் இருந்தால் அவற்றுக்காகத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை எவரும் ஆட்சேபிக்க முடியாது. கண்மூடித்தனமாகப் பணம் சம்பாதிப்பது ஒன்றையே முழுமுதல் இலக்காகக் கொண்டு, மக்களுக்குச் செய்ய வேண்டிய பணியைப் புறக்கணிப்பவர் யாராக இருந்தாலும் மன்னிக்கக் கூடாது.

மக்கள் நலன்கள், வசதிகள் உரிமைகளில் கை வைப்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்களைத் தண்டித்தே ஆக வேண்டும்.

ஆனால் அரசாங்கத்துடன் போட்டி போடுகிறார்கள், அரசுக்குச் சேர வேண்டிய வருமானத்தை இல்லாமற் செய்கிறார்கள் என்பதற்காக ஒரு தனியார்துறையை நசுக்குவது நியாயமாகாது. அப்படியானால் சகல துறைகளிலும் உள்ள நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள தனியார் துறையை அரசு நசுக்குமா? தடை செய்யுமா? மூடுமா? அப்படிச் செய்யத்தான் இயலுமா?

கொழும்பு-யாழ் ரயில் சேவை ஒழுங்காக நடக்காத ஒரு காலத்தில், தனியார் பஸ் சேவையை தடைசெய்ய நினைப்பது வடபகுதி மக்களின் போக்குவரத்துக்குத் தடைபோடும் முயற்சியே அன்றி வேறில்லை.

## சரசாலை சுற்றிவளைப்பு

சரசாலை, கனகன்புளியடி, மட்டுவில் வடக்கின் ஒருபகுதி கடந்த திங்கட்கிழமை இந்திய அமைதிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

அதிகாலை கனகன்புளியடி முகாம் பக்கமாக இருந்து இரண்டு ஷெல் அடிச்சத்தங்கள் கேட்டன.

கடைச் சிப்பந்திகள், மாணவர்கள் அரச ஊழியர்கள் மட்டுமே வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர். இளைஞர்கள் பெருமளவில் தடுத்து வைக்கப்பட்டனர்.

அமைதிப்படையினர் சில இடங்களுக்கு முகமூடிகளையும் அழைத்துச் சென்றனர். (ஒ-31)

# இந்திய இராணுவத்தில் கூர்க்கா வீரர்கள் எந்த ரெஜிமண்டிலும் சேரலாம்

புதுடில்லி, ஆக 24

இந்திய இராணுவத்தில் கூர்க்கா வீரர்களுக்கு எனப் புதிதாக தனி ரெஜிமண்ட் அமைக்கப்படமாட்டாது.

இருக்கும் கூர்க்கா ரெஜிமண்டுக்குப் புதிதாக கூர்க்கா வீரர்கள் சேர்க்கப்படமாட்டார்கள்.

இந்திய இராணுவத்தின் எந்த ரெஜிமண்டிலும் இனி கூர்க்கா வீரர்கள் சேர்ந்து கொள்ள முடியும்.

இதற்கு வசதி செய்யும் உடன்படிக்கை ஒன்றை இந்திய மத்திய அரசு கூர்க்காலாந்து தேசிய விடுதலை முன்னணியுடன் செய்து கொண்டது.

இந்த உடன்பாடு புதுடில்லியில் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

இந்தியாவில் வாழும் சுமார் 65 லட்சம் நேபாளி இனத்தவர் இந்த உடன்பாட்டின் கீழ் இந்தியப் பிரசைகளாகக் கருதப்படுவர் என்றும் இந்த உடன்பாடு கூறுகிறது.

கூர்க்கா மலைப்பிரதேச கவுன்ஸில் ஒன்றை நிறுவுவது சம்பந்தமான உடன்பாடு ஏற்கனவே கல்கத்தாவில் கடந்த திங்கள் கைச்சாத்தானது தெரிந்ததே. (எ)

## பர்மா அரசு மீது மன்னிப்புச்சபை குற்றச்சாட்டு

லண்டன், ஆக. 24

பர்மா இராணுவம் அப்பாவி மக்களை சுட்டுக் கொன்றுள்ளது என்று சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் கண்டித்துள்ளது.

அண்மையில் பர்மாவில் நடந்த கிளர்ச்சிகளில் சுமார் 3 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டது. (எ)

# நான் ஸ்டண்ட் அடித்தால் தமிழ் நாடு தாங்காது!

## சபாநாயகர் பாண்டியன் பெருமிதம்

சென்னை ஆக 24

இந்திய அரசியல் சட்டத்தைஎரித்ததாக பதவி நீக்கம் செய்யப்பட்ட 10 தி. மு. க. எம் எல். ஏக்களும்எரித்தது வெள்ளை அரசின் 1919ம் ஆண்டின் சட்டத்தைத் தான். அரசியல் சட்டத்தை அல்ல என்று பி. எச். பாண்டியன் கூறினர்.

அ. தி. மு. க (ஜா) பொதுக்கூட்டம் சென்னை கோடம்பாக்கத்தில் நடந்தது. இதில் கலந்து கொண்டு சபாநாயகர் பி. எச் பாண்டியன் பேசியதாவது;

காங்கிரஸ் கட்சி கமிட்டிகளை அமைத்து வருகிறது. வடக்கே நடப்பது போல் இங்கேயும் வாக்குப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு போய் விடலாம் என்று நினைத்தால் நடக்காது.

நான் ஸ்டண்ட் அடிப்பதாக சிலர் கூறுவார்கள். நான் ஸ்டண்ட் அடிக்க ஆரம்பித்தால் தமிழகமே தாங்காது. என்னை ஏமாற்றி விட்டு பண்ருட்டி, நெடுஞ்செழியன் ஆகியோர் மந்திரியாக நீடிக்க நினைத்தார்கள். நான் விடவில்லை.

பண்ருட்டி ராமச்சந்திரனை எம். ஜி. ஆர். கையிலேயே வைத்திருந்ததற்குக் காரணம் உண்டு. வீட்டில் தொந்தரவு செய்யும் பிள்ளைகளைத் தான் விருந்து வீட்டுக்கு அழைத்துச் செல்வோம். இங்கே இருந்தால் பண்ருட்டி ஏதாவது தொந்தரவு செய்வார் என்று தான் எம். ஜி. ஆர் அவரைக் கையில் வைத்திருந்தார். தி. மு. க. தலைவர் கருணாநிதி ஏமாந்தது போல அவர் விரும்பவில்லை. இப்போது நெடுஞ்செழியனை கையில் வைத்துக் கொண்டு விளையாடுகிறார்.

உயர் நீதிமன்ற நீதிபதி நியமனம் பற்றி கவர்னர் சொல்லியிருக்கிறார். இந்திய அரசியல் சட்டம் 217 படி நீதிபதிகளை நியமிக்க அவருக்கு அதிகாரம் கிடையாது. மாநில அமைச்சரவையில் அனுமதி பெற்றுத் தான் நீதிபதி நியமனம் செய்ய வேண்டும்.

அரசியல் சட்டத்தில் ஆளுநர் என்று இருக்கிற இடம் எல்லாம் அமைச்சரவையைத் தான் குறிக்கும்.

இந்திய அரசியல் சட்டத்தை எரித்த 10 தி. மு. க. வினரை நான் எம். எல். ஏ. பதவியிலிருந்து நீக்கம் செய்தேன். அரசியல் சட்டத்தை எரித்தார்கள். ஆனால் அவர்கள் எரித்தது அரசியல் சட்டமல்ல. வெறும் காகிதம் என்றார்கள். அவர்களை மீண்டும் பதவியில் கொண்டுவர நான் வழி சொல்கிறேன். ஏனென்றால் நான் வைத்த முள்ளை நானே எடுக்க வேண்டும். தி. மு. க. வினர் எரித்தது இந்திய அரசியல் சட்டத்தை அல்ல. 1919 ஆம் ஆண்டு வெள்ளை அரசு கொண்டு வந்த சட்டத்தைத் தான் எரித்தார்கள், இப்படி அவர்கள் சொன்னால் பதவி நீக்கம் செய்யப்பட்ட காலத்துக்குரிய சம்பளத்தையும் நான் பெற்றுத் தருகிறேன்.

இவ்வாறு பி. எச். பாண்டியன் பேசினார். (எ)

# பெனாஸிர் பூட்டோவுக்கு கமாண்டோ பாதுகாப்பு

இஸ்லாமபாத். ஆக. 24

பாகிஸ்தானில் திருமதி பெனாஸிர் பூட்டோவுக்கு கமாண்டோ பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

கராச்சியில் உள்ள அவரின் வீட்டின் முன்னால் ஆயுதம் தரித்த கமாண்டோக்கள் நால்வர் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டை பலவீனப் படுத்தும் சக்திகள் இராணுவத்தினுள் புகுந்து இருப்பதாக கூறியே பதில் அரசுத் தலைவர் குலாம் இஷாக் கான் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

எந்த பயமுறுத்தலும் தன்னைப் பணியவைக்காது என்று மக்கள் கட்சித் தலைவரான பெனாஸிர் பூட்டோ தெரிவித்தார். (எ)

**வெளி உலகில்**

# பலஸ்தீன நாடு அமைவதை இஸ்ரவேல் எதிர்க்கும்!

பலஸ்தீன நாடு அமைக்கப்படுவதை இஸ்ரவேல் ஏற்றுக்கொள்ளாது என்று அறிவிக்கப்பட்டது.

இஸ்ரவேல் பிரதமர் யிற்ஸாக் ஷாமிர் இதனை அறிவித்தார்.

இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பகுதியில் பலஸ்தீனியரின் தாயகம் மீட்கும் கிளர்ச்சி ஆரம்பமாகி ஒன்பது மாதங்களாகின்றன.

இக்கிளர்ச்சி இன்னும் ஒன்பது ஆண்டுகள் தொடர்ந்து நடந்தாலும் பலஸ்தீன நாடு அமைக்கப்படுவதற்கு நாம் இடம் கொடுக்க மாட்டோம் என்று பிரதமர் ஷாமிர் சொன்னார். (எ)

## கொள்ளை, கடத்தலைத் தடுக்க

# மட்டக்களப்பில் விழிப்புக்குழு அமைப்பது பற்றி ஆலோசனை

### பிரசைகள் குழுவின் கருத்தை அமைதிப்படையினர் கோருகின்றனர்

மட்டக்களப்பு, ஆக. 25

மட்டக்களப்பு பகுதியில் இடம்பெற்று வரும் கொள்ளை, கடத்தல், பணம் வசூல் செய்தல் போன்ற நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக அந்தப்பகுதி மக்களை உள்ளடக்கிய விழிப்புக்குழு அமைப்பது குறித்து இந்தியப் படையினர் ஆராய்ந்து வருகின்றனர்.

இவ்விடயம் குறித்து இந்தியப்படை இணைப்பதிகாரி பிரிகேடியர் ஐ எம். தார் பிரசைகள் குழுவின் கருத்தை கடந்த வார இறுதியில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின்போது கேட்டறிந்து கொண்டார்.

பிரசைகள் குழுவினர் இது குறித்து தமது சபையைக் கூட்டித் தீர்மானித்து தகவல் தெரிவிப்பதாகப் பதிலளித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் மக்கள் மாலையானதும் வீடுகளில் முடங்கிக்கிடக்கிறார்கள்.

இந்த நேரங்களிலேயே கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

ஆகவே மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடியதாக ஊரடங்குச் சட்டம் வாபஸ் பெறப்பட்டால் இந்தப் பிரச்சினையை ஓரளவேனும் தவிர்க்கலாம் என இச்சந்திப்பின்போது பிரசைகள் குழுவினர் ஆலோசனை தெரிவித்தனர். இதுகுறித்து ஆராய்ந்து தாங்கள் முடிவு எடுப்பதாக இந்தியப் படை இணைப்பதிகாரி தெரிவித்தார். (உ-21)

### பல்கலைக் கழக மாணவர் ஆதரவு

யாழ்ப்பணம், ஆக. 25

வடக்கு-கிழக்குபிரசைகள் இணைப்புக்குழு இன்று வியாழக்கிழமை யன்று நடத்த ஏற்பாடு செய்துள்ள ஹர்த்தாலுக்கும் அடுத்தநாள் நடைபெற உள்ள உண்ணுவிரதப் போராட்டத்திற்கும் தமது பூரண ஆதரவைத் தெரிவிப்பதாக யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

அனைத்துத்தமிழ்பேசும் மக்களையும் இந்த சாத்வீகப் போராட்டத்திற்கு ஆதரவுநல்கும்படியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## முல்லைத்தீவு கச்சேரி இயங்கவில்லை

ஒட்டுசுட்டான், ஆக 25

முல்லைத்தீவுக் கச்சேரி இவ்வாரம் இயங்கவில்லை.

அடுத்த வாரம் சமூக சேவைப் பிரிவு, உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு நிதிப் பிரிவு மட்டுமே மீண்டும் இயங்குமென்று தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய பிரிவுகள் சிவில் நிர்வாக சீர்குலைப்பால் தொடர்ந்து ஸ்தம்பிதமாக இருக்குமெனவும் மேலும் தெரிய வருகிறது. (ஒ-113)

## தமிழ் வாலிபரின் சடலம் சாக்கில்

கொழும்பு. ஆக. 25

தமிழ் வாலிபர் ஒருவரின சடலம் வெள்ளவத்தை மனிங் பிளேசில் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சடலம் சாக்கு ஒன்றினுள் கட்டப்பட்டிருந்தது. வாய் பிளாஸ்ரிரினால் ஒட்டப்பட்டிருந்ததால், மூச்சுத் திணறியே இறந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

அவரது சடலத்துக்கு அருகில் ஜெகதீஸ்வரன் என்ற துண்டு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டதாம். (அ)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### நல்லைப் புண்ணியன் மீது எப்படிக் காதல் கொண்டாய்?

இராகம்: வசந்த　　தாளம்: ஆதி

பல்லவி

எப்படிக் காதல் கொண்டாய் — சகியே
செப்படி வித்தைகள் செய்யும் முருகன்மீதில்

அனுபல்லவி

அப்பனுக்கே புத்தி செப்பிய தப்பிலிமுன்
தப்பவழி யறியாத தருவாக நின்றவன்மேல் (எப்)

சரணம்

மாங்கனியை வாங்கவந்து
ஆண்டியாக நின்றான்அவன்
மங்கையர் இருவருடன்
மருவிக் குலவிடுவான்
ஓங்குகதிர் வேலெடுத்து
ஒறுக்கும் அசுரர்குலம்
ஒழித்தவன் தேவருக்கு
ஒளிரருள் அளித்தவன்
தூங்குகரி மாமுகனின்
துணையவன் இளையவன்
தோகைமயில் மீதமரும்
வாளக்கடம் பணிமார்பன்
பூங்கமழும் சோலைமலி புனிதநல்லை நகரில்
புண்ணியன் போலிருக்கும்
புதுமனக் கள்வன்மீதில் (எப்)

**கவிமாமணி ந. வீரமணிஐயர்**

## பக்தியுடையவருக்கு.....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யும் பஜனை ஒலி.

வதிகள் தோறும் வெண்மணல் பரப்பி வெண்கொடியும் விதானமும் வாழையும், தோரணமும் மாவிலையும் காட்சி தரும் மகோற்சவ நாட்கள், ஆயிரக் கணக்கான இளைஞர்கள் பிரதிட்டை பண்ணும் அற்புதமான தினங்கள்.

அம்மா என நாம் அழுது அழைக்கின்றோம் என அன்புக் குரல் எழுப்பி, எம்பெருமாட்டியை வேண்டி நிற்கும் இந்த நாள்கள் புனிதமானவை.

இந்தப் புனித திரு நாட்களில் தினமும் அன்னதானம் வழங்கி, "மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தம்மை அமுது செய்வித்தல்" என்ற கோட்பாடு நிறைவேற்றப் படுகிறது.

அமைதியினமும், சஞ்சலமும் நிறைந்த இந்தக் காலத்தில் ஆலயங்கள் தான் எமக்குத் தஞ்சம். இங்கு நிகழும் பெரு விழாக்களினால் மக்கள் சமுதாயம் அருளில் [illegible] இலட்சியத்தை உணர்ந்து உய்தியடைய [illegible] என வாழ்த்துகிறேன்.

### சமய நிதிகளில்

### நாளை தேர்

நாவற்குழி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா நாளை வெள்ளிக்கிழமைநடைபெறும்.

நாளை மறுதினம் தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் நிறைவு பெறும். (உ-க)

### நவாலியில்

யாழ்ப்பாணம், ஆக 25

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக் [illegible] தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (ஒ)

### பாலஸ்தாபன அபிஷேகம்

காரைநகர், ஆக. 25

காரைநகர் சிவன் கோவில் (ஈழத்துச் சிதம்பரம்) பாலஸ்தாபன அபிஷேகம் எதிர்வரும்28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்பக் கிரியைகள் 26 ஆம் திகதி நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு விக்னேஸ்வர பூஜையுடன் ஆரம்பமாகும். (ஒ-சி)

# கிளிநொச்சியில் ஷெல் வீச்சு ஓயவில்லை

யாழ்ப்பாணம், ஆக. 25

கிளிநொச்சிப் பகுதி காடுகளை நோக்கி தொடர்ந்தும் ஷெல் தாக்குதல் நடைபெற்று வருகிறது.

விஸ்வமடுவில் முகாமிட்டுள்ள அமைதிப் படையினர் அயலில் உள்ள காடுகளை நோக்கியும்—

உருத்திரபுரம் பகுதியில் முகாமிட்டுள்ள அமைதிப் படையினர் கோணாவில், அக்கராயன்குளக்காட்டுப் பகுதிகளை நோக்கியும்-ஷெல்களை ஏவி வருகின்றனர்.

இந்த ஷெல்கள் காட்டுப் பகுதிகளை குறிவைத்தே ஏவப்படுகின்றபோதிலும். இடையிடையே இவை குடிமனைகளையும் தாக்கி வருகின்றன.

இந்த ஷெல் வீச்சினால் கடந்த சில வாரங்களில் பொதுமக்களில் இருவர் பலியாகியுள்ளனர் என்றும் மூவர் காயமுற்றுள்ளனர் என்றும் பிரசைகள் குழுக்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. (ஒ-க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுர ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, :-: யாழ்நகர்.

# உதயன்

25 - 08 - 1988 வியாழக்கிழமை

★ சேட்டிங்ஸ் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

## வ.பி. போக்குவரத்துச் சபை
## வருமானம் குறைந்த நிலையில் சேவை
### உயர் அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஆக.25

வடபிராந்திய போக்குவரத்துச் சபை கடந்த சில தினங்களாக வருமானம் குறைந்த நிலையில் சேவை புரிகிறது.

யாழ். மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகம் சீரற்றுப்போனதன் காரணமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை தற்போது தனியாரிடம் ஒரு லீற்றர் டீசலை 10 ரூபா விகிதம் கொள்வனவு செய்து வருகிறது.

தினம் ஒன்றுக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களுக்கு 2,500 லீற்றர் டீசல் தேவைப்படுகிறது.

இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தனியார் மூலம் டீசலைக் கொள்வனவு செய்து சேவையாற்றுகின்ற போதிலும் வருமானம் குறைந்த நிலையில் சபை பெரும் நஷ்டத்தில் இயங்கவேண்டிய நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடபிராந்திய போக்குவரத்துச் சபை அநுராதபுரம் சென்று டீசலைக் கொள்வனவு செய்ய இந்திய அமைதிப்படை அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

(ஒ-5-10)

## தேர்தல்களை நடத்து முன் அரசு பதவி விலகவேண்டும்
### இப்படி ஜே. வி. பி. கோருகிறது

கொழும்பு, ஆக 25

அரசாங்கம் பதவி விலகி, காபந்து அரசாங்கம் ஒன்றை அமைத்து அதன் கீழ்தான் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றை நடத்தவேண்டும்.

தேர்தல்கள் நேர்மையாகவும், மோசடிகள் இன்றியும் நடப்பதற்கு இது உறுதுணையாக இருக்கும்.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி) மத்திய கமிட்டி இவ்வாறு புதிய கோரிக்கை விடுத்துள்ளது.

★ ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றை நடத்துவதற்கு முன்னர் இன்றைய அரசாங்கம் பதவி விலகவேண்டும்.

★ உயர் நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதியரசர் தலைமையில் காபந்து அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

★ காபந்து மந்திரி சபையில் கட்சிசார்பற்ற நடுநிலையாளர்கள் இடம் பெறவேண்டும்.

இப்படி மூன்று புதிய கோரிக்கைகளை ஜே. வி. பி. யினர் முன்வைத்துள்ளனர். (ஒ-க)

## இந்திய அரசியல் பற்றி புலிகள் கருத்துக்கூறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்
### சிதம்பரம் சொல்கிறார் இப்படி

புதுடில்லி, ஆக. 25

இந்தியஅரசியல்பற்றி கருத்துத் தெரிவிப்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அவர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகப் புகலிடம் நாடித்தான் வந்திருக்கின்றார்கள்.

ராஜ்யசபாவில்மத்திய அரசின் உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய தேசிய பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதாவை ராஜ்ய சபைஏற்றுக்கொண்டது.

விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் திரு. ப. சிதம்பரம் சொன்னதாவது;

மதுரை வங்கிக் கொள்ளைபற்றி அதிர்ச்சியூட்டும் தகவல்கள் அரசுக்குக் கிடைத்துள்ளன.

கொள்ளை குறித்து புலனாய்வு தொடர்ந்து இடம்பெறுவதால் இத்தகவல்களை அரசு வெளியிட விரும்பவில்லை — என்றார். (ஒ-எ)

## பர்மாவில் நேற்று
## இராணுவச் சட்டம் திடீரென்று விலக்கப்பட்டது

ரங்கூன், ஆக. 25

பர்மாவில் இராணுவச் சட்டம் திடீரென்று நேற்று விலக்கப்பட்டது.

ரங்கூனில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டமும் நீக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் அரசு இதனை அறிவித்தது.

அதன்பின்னர் அமைச்சரவையின் விசேட கூட்டம் ஆரம்பமானது. கூட்ட முடிவில் அரசுத் தலைவர் மொங்மொங்நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவார் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## சமுத்திரனின் பூதவுடல் தகனம்

தாளையடி, ஆக 25

பளை சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு மரணமான தமிழீழ விடுதலைப் புலிகளின் பளைப் பொறுப்பாளர் சமுத்திரனின் (திருமலை) பூதவுடல் பளையில் தகனம்செய்யப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை பகல் பளை சந்தைக் கட்டடத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த பூதவுடல் அன்று மாலை பளையிலுள்ள மயிலங்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

(ஒ-144)

## தாக்குதலுக்குப் பயந்து பஸ் போக்குவரத்து பாதை மாறியது!

யாழ்ப்பாணம், ஆக.25

வழமையாக மானிப்பாய் வீதியூடாக நடக்கும் போக்குவரத்துக்கள் செவ்வாயன்று காரைநகர் பாதையூடாகவே அதிகளவு நடத்தப்பட்டன.

மானிப்பாய்ப் பகுதியில் நேற்று இந்திய அமைதிப் படையினர் பொதுமக்களைக் கண்டபடி தாக்கியதே இதற்குக் காரணம்என அறியவந்தது.

மானிப்பாய் வீதி ஊடாக போக்குவரத்து மேற்கொண்ட வாகனங்களில் இருந்து பயணிகள் இறக்கப்பட்டு தாக்கப்பட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்களும் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்பட்டது. (ஒ-10)

## பூசகர் ஆஸ்பத்திரியில்

காரைநகர், ஆக. 25

வலந்தலை அம்மன் கோயிலின் பிரதம பூசகர் திரு. குகனேசசர்மா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நடுத்தரவயதுடையவரான பூசகர் அமைதிப் படையினரின் தாக்குதலுக்கு ஆளாகியே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை வலந்தலைப் பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது இவரும் தாக்குதலுக்கு ஆளானவர்களில் ஒருவர் எனவும் கூறப்படுகிறது. (ஒ-73)

## பெற்றோல் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னம் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிலையம் ஒன்றில் நேற்றுப் பெற்றோல் லீற்றர் 18 ரூபாவாகவும், கைதடியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றில் டீசல் லீற்றர் 10 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டதாகவும் அறியவந்துள்ளது.

பெற்றோலின் வழமையான விலை லீற்றர் 13 ரூபா 50 சதம் என்பதும், டீசல் லீற்றரின் விலை 8 ரூபா 61 சதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் எரிபொருள் விற்பனை முகவர் ஒருவரிடம் விலை அதிகரிப்புக் குறித்துக் கேட்டபொழுது, எரிபொருள்களைக் கொழும்பில் இருந்து கொண்டு வந்தால் மேற்கூறிய விலைக்கே விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

(ஒ-10)

## தாலிக்கொடி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதியான நகைகளை கொள்ளையடித்தனராம்.

பின்னர் மணமகளின் கழுத்தில் இருந்த தாலிக்கொடியைக் கொள்ளையர்கள் கழற்றினர். மணமகள் 'தாலியையாவது விட்டு விட்டுப் போங்கோ' என்று கதறி அழுதாராம்.

மனமுருகிய கொள்ளையர் தாலிக்கொடியை மட்டும் கொடுத்துவிட்டு ஏனைய நகைகளுடன் அவ்விடத்தை விட்டு ஓட்டம் பிடித்தனர்.

இக்கொள்ளை குறித்து யாழ். ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் முறையிடப்பட்டுள்ளது.

(ஒ-க-10)

## யாழ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இறந்த பெண்ணும் கடுமையான காயங்களுக்குள்ளான இருவரும் சிலாபம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

காயத்திற்குள்ளான இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்களது தற்போதைய நிலைபற்றி எதுவும் தெரியவரவில்லை. (ஒ-5)

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம் ஆக 25

கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள ''லொட்ஜ்'' ஒன்றுக்கு அருகில் நிகழ்ந்த கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் பலத்த காயத்திற்குள்ளாகியதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அறியவந்தது. (ஒ-5)

## நகரில்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களும் ஸ்ரேசன் சந்தியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டன. பாதசாரிகள் தங்கிச் செல்லவும் அனுமதிக்கப்படவில்லை. சில மணி நேரங்களின் பின் மீண்டும் பயணத்தைத்தொடர அனுமதிக்கப்பட்டனர்.

(ஒ-5)

## போதை வஸ்துகளை விநியோகிப்போரை
### மீண்டும் எச்சரிக்கிறார்கள் புலிகள்

போதைவஸ்து விநியோகிப்போரை அதனைக் கைவிடுமாறு, தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக அவர்கள் விடுத்த அறிக்கை விவரம் வருமாறு:-

தமிழீழத்தில் கலாசாரச் சீரழிவைக் கொண்டுவரும் போதைவஸ்துவை விநியோகிப்போருக்கு மரண தண்டனை வழங்கப்படும் என முன்பு அறிவித்திருந்தோம்.

ஆனால் இந்த அறிவித்தலின் பின்பும், குறிப்பாக முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், தொடர்ந்தும் போதைவஸ்துவை விநியோகிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், அது முஸ்லிம் – தமிழர் என்ற சமூகப்பிரச்சினையாக மாறலாம் என்பதால் நாம் தம்மீது நடவடிக்கை எடுக்கமாட்டோம் என முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த போதைவஸ்துவை விநியோகிப்போர் நினைக்கின்றார்கள்.

தமிழீழத்தில் கலாசார சீரழிவை ஏற்படுத்தும் போதைவஸ்துவை விநியோகிக்கும் எவருக்கும் எமது இயக்கத்தின் அதி உயர் தண்டனை வழங்கப்படும் என மீண்டும் எச்சரிக்கிறோம்.

முஸ்லிம் மக்கள் எமது நடவடிக்கைகளை முழுமையாக ஆதரிப்பார்கள் என நம்புகின்றோம்— என்று உள்ளது. (அ-க)

## மரண...

தங்கியிருந்திருந்தாலும் மட்டுமே இக் கொடுப்பனவு வழங்கப்படும் என யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த நிவாரணத்தைப் பெற ஏற்கனவே விண்ணப்பித்து 'வவுச்சரில்' கையெழுத்திட்டவர்கள் நாளை முதல் யாழ் செயலகத்தில் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

## கொழும்பு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் அதிகமான பயணிகள் வவுனியா செல்லும் மினிபஸ்களிலும், வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை பஸ்களிலும் முண்டியடித்துக்கொண்டு பிரயாணம் செய்ததைக் காணமுடிந்தது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தனியார் பஸ் சேவைக் கட்டணங்கள் நேற்றுடன் நூறு ரூபாவாக குறைக்கப்படவேண்டும் என்று அமைதிப்படையினர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

(ஒ-5)

## நாளைய.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள், பிரஜைகள் குழுக்கள், சிறையில் இருந்து விடுதலையானோர் ஆகியோர் முன்வந்துள்ளனர்.

முதல்நாள் ஆரம்பமாகும் உண்ணாவிரதத்தில் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த இரண்டு பேர், பிரஜைகள் குழுக்கள் சார்பில் ஒருவர், விடுதலை பெற்றோர் சார்பில் ஒருவர், முகாம்களில் உள்ளவர்களது பெற்றோர்கள் சார்பில் இரண்டுபேர் கலந்து கொள்வர்.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை சுழற்சிமுறையிலான உண்ணாவிரதப் போராட்டம் கட்டம் கட்டமாக நடைபெறும் என்றும், கோரிக்கைகள் நிறைவேறுவிடில் இறுதியில் சாகும்வரை உண்ணாவிரதமாக இப்போராட்டம் மாற்றப்படும் எனவும் நேற்று கைலாச பிள்ளையார் கோவிலடியில் இதுசம்பந்தமாக நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டது.

உண்ணாவிரத மேடையில் தினமும் எட்டுமணி முதல் 11 மணிவரை பக்திப்பாடல்கள் ஒலிபரப்பப்படும்.

11 மணிமுதல் 12மணி வரை மௌன விரதம் அனுஷ்டிக்கப்படும். பின்னர் 12 மணிமுதல்2மணி வரை பக்திப் பாடலும். 2 மணி முதல் 3 மணி வரை மௌன விரதமும் 3மணிமுதல் நான்குமணி வரை பக்திப் பாடலும் ஒலிபரப்பப்படும்.

இப் போராட்டத்தில் சகலரையும் கலந்து கொண்டு இளைஞர்களது விடுதலைக்கு உதவுமாறு வடக்கு-கிழக்கு பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ-10)

## கேள்வி அறிவித்தல்
### பிரதேசக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

1988 ஆகஸ்ட் மாதம் 09ஆம் திகதி முரசொலி பத்திரிகையில் வெளியான கல்வித் திணைக்கள கேள்வி விளம்பரத்தில் குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்வி விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 31-8-88 (புதன்கிழமை) முற்பகல் 10-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

வெ. சபாநாயகம்
பிரதேச கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(C6411)

THE JAFFNA ACADEMY
G. C. E A L Aug 1989 Revision Classes
Physical & Bio Science

க. பொ. த உயர்தர பரீட்சைக்கு ஒரு முறையாவது தோற்றிய எவரும் இந்த வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றுக மீட்டல் செய்யப்படும்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும். வகுப்புகள் 05 – 09 – 88 இல் ஆரம்பமாகின்றன.

DIRECTOR,
Jaffna Academy,
376, Main Street,
Chundikuli.
(5979)

## மரண அறிவித்தல்கள்

### திரு. S. E. ஐயாத்துரை

சுருவிலை பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் பிரபல வர்த்தகரும், நீர்கொழும்பு ''கிறவுன்ஸ்'' உரிமையாளருமாகிய S. E. ஐயாத்துரை காலமானார்.

அன்னார் ரேசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மாகிறேற், விக்ரர், பிரான்சிஸ்கா, காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர், காலஞ்சென்றயோசப்பின், நீர்கொழும்பு ''சீப்சைட்'' பஸ்ரியாம்பிள்ளை, புஸ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற S M. சவிரிமுத்து, பொன்னம்மா, B J. அலோசியஸ் (யாழ்ப்பாணம்), றெஜினா. செபம், T. தவராசா, காலஞ்சென்ற நீர்கொழும்பு வர்த்தகர் M. S. மந்திரி, திரு. திருமதி M. பஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அருமைமைத்துனரும்.

பீற்றர் குலநாயகம் (லண்டன்) அலிஸ்ரன் மதுரநாயகம் (பிரான்ஸ்), அருட்திரு. யோசப் அருமைநாயகம், (முகாமையாளர், யாழ். கத்தோலிக்க அச்சகம்), மறிற்றே ஜெராட், மாறிஜஸ்ரின் ஆகியோரின் அன்புத் தந்தையும், மரினா பீற்றர் (லண்டன்), தேவி மதுரநாயகம், ஜெராட், (ஆசிரியர் யாழ்/சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி, உரிமையாளர் ''செல்லம்ஸ்'' பேளி ஜூவலர்ஸ்) ஜஸ்ரின் (ஜெர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், எலிசா, (F). பேபியன், கிறிஸ்ரி, யூட். நிற்ரு, டெக்ஸ், ஆகியோரின் அன்பு பேரனும் திரு. திருமதி எட்வின் சவிரிமுத்து திரு. திருமதி F.N C. சவிரிமுத்து, திரு. திருமதி பாலசிங்கம் பேளி, திரு. திருமதி B. J. அலோசியஸ் பிரகாசி, திரு. திருமதி பங்கராசா இமல்டா ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் சுருவில் அன்னமரிமாதாசேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக அன்னாரின் இல்லத்திலிருந்து 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:- ஜெராட்
சுருவில்,
ஊர்காவற்றுறை.
(5978)

### கண்ணையா செட்டியார்

முன்னாள் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் கணக்குப் பிள்ளை கண்ணையா செட்டியார் அவர்கள் 24-8-88 அன்று காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி அப்பாவுச் செட்டியார் அவர்களின் அன்பு மகனும், அம்மணி அவர்களின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம், நாகலெட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரேமகுமாரி, முத்தையா ஆகியோரின் மாமனாரும் ஜனார்த்தன், கோகிலறமணன், ஜானகி, ஜயந்தி, புனஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

19A, யாழ் ரோட்,
யாழ்ப்பாணம்.
தகவல் : சுப்பிரமணியம்
(5981)

### திருமதி தையல்நாயகம் பாலசுப்பிரமணியம்

24 - 08 – 88 ஆம் திகதி வெளியான உதயன் பத்திரிகைத் தகவலின்படி கோண்டாவில் கிழக்கு திருமதி தையல்நாயகம் பாலசுப்பிரமணியத்தின் இறுதிக் கிரியைகள் 27 – 08 – 88 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: சி. பாலசுப்பிரமணியம்.
தபாற்கந்தோர் வீடு,
கோண்டாவில் கிழக்கு.
(6011)

### கிருஷ்ணசாமி வள்ளித்தங்கம்

தொண்டமானாறைப் பிறப்பிடமாகக் கொண்ட. காலஞ் சென்ற மலேயன் பென்ஷனர் திரு சி. கிருஷ்ணசாமியின் மனைவி கி. வள்ளித்தங்கம் 23 - 08 – 88 அன்று காலமானார்.

இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
(6005)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 25 08 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Thursday 25th August 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org